# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# சுய கற்றல் கையேடு - 2020
# நாடகமும் அரங்கியலும்

# தரம் 7

*முதலாம் தவணை*

## 01. சிறுவர் அரங்கச் செயற்பாடுகள் (1.1)

- அரங்கச் செயற்பாடுகள் என்பது கற்பனையைப் பயன்படுத்தி படைப்பாக்கச் சிந்தனையோடு சமூகமாக பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு அறிவும் மகிழ்வும்பெறுதலாகும்.
- சிறுவர் அரங்கச்செயற்பாடுகள் என்பது சிறுவர்களின் வயது, அனுபவம், விருப்பு, வெறுப்பு என்பவற்றுக்கு ஏற்ப வகுப்பறைகளிலும் வெளியிலும் மேற்கொள்ளப்படுகின்ற ஆடல், பாடல், விளையாட்டு, புத்தாக்கம் உள்ளிட்ட பலவகைச் செயற்பாடுகளாகும்.

***சிறுவர்களுக்கான சில அரங்கச் செயற்பாடுகள் வருமாறு***

- பாடல் ஒன்றினைப் பயின்று விரும்பியவாறு அதனை ஆடி அபிநயம் செய்து குழுவாக ஆற்றி மகிழ்வடைதல்.
- அரங்கவிளையாட்டு ஒன்றினை வழிநடத்தலோடும் விதிமுறைகளோடும் குழுவாக விளையாடி மகிழ்வடைதல்
- குறிப்பிட்ட ஒரு உருவத்தினை அல்லது சூழமைவை போட்டிக்கு உருவாக்குதல் *எடுத்துக்காட்டாக* இரண்டு மூன்று குழுக்களாக பிள்ளைகளைப் பிரித்து தாமரைப்பூ, யானை கோவில்…போன்ற உருவங்களை குழுவாக யார் அழகாகவும் விரைவாகவும் உருவாக்குகின்றார்கள் என்பதனை போட்டி போன்ற அல்லது விளையாட்டைப் போன்று நிகழ்த்துதல்.
- வகுப்பறையில் கிடைக்கும் தளபாடங்களைப் பயன்படுத்தி குறிப்பிட்ட உருவங்களை உருவாக்குதல்.
- கழிவுப்பொருட்களைப் பயன்படுத்தி கற்பனையோடு உருவங்களை உருவாக்குதல்.
- உருவங்களை உருவாக்குவது மட்டுமன்றி அவற்றுடன் இணைந்த செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.
- தேர் ஒன்றினைச்செய்து அதனைவைத்துக்கொண்டு தேர்த்திருவிழா ஒன்றினை நடத்துதல்.
- வீடு ஒன்றினை உருவாக்கி புதுமனைப்புகுவிழா ஒன்றினை நடத்துதல்
- குழுவாக ஓவியம் வரைதல் உதாரணமாக ஒரு வெண் பலகையில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோடுகளை உருவாக்கி ஓவியத்தினை முழுமைப்படுத்ததல்

***சிறுவர் அரங்கச் செயற்பாடுகள் மூலமாக கிடைக்கும் நன்மைகள சில வருமாறு***

- மாணவர்கள் அச்சம் வெட்கம் இன்றிச்செயற்பட முடியும்
- கூட்டாகச் சேர்ந்தியங்கும் பண்பு வளர்க்கப்படும்
- கற்பனைத் திறன் மேம்படும்
- படைப்பாக்கத் திறன் மேம்படும்
- மகிழ்வோடு செயற்பாடுகளில் ஈடுபட்டு மகிழ முடியும் குழு ஒற்றுமை ஏற்படும்
- மாணவர்களுக்கிடையே உயர்வு தாழ்வு நிலை நீங்கும்
- உடல் உள ஆரோக்கியம் ஏற்படும்.

| |
|---|
| **செயற்பாடு**<br>மேற்கூறப்பட்ட அரங்கச் செயற்பாடுகளில் சிலவற்றை வீட்டில் பெற்றோர் சகோதர்களுடன் இணைந்து செயற்பட்டு அனுபங்களைப்பெறுங்கள். |

**பயிற்சி வினாக்கள்**

1.சிறுவர் அரங்கச் செயற்பாடுகள் என்றால் என்ன?

2.சிறுவர் நாடகத்திற்கும் சிறுவர் அரங்கச்செயற்பாட்டுக்கும் உள்ள வேறுபாடு யாது?

3.வகுப்பறையில் இருந்தவாறு செய்துகொள்ளத்தக்க அரங்கச்செயற்பாடு ஒன்றினை எழுதுக?

## 02 நாடகக்கதை /விடயப்பொருள் (1.2)

- நாடகம் கதை சொல்லுகின்ற ஒரு கலை வடிவமாகும்.
- கதாபாத்திரங்களின் உரையாடல்கள்,செயல்கள் மூலமாக கதை சொல்லப்படும்.
- அந்தக் கதையில் ஒரு செய்தி சொல்லப்படும்.
- அது பல அர்த்தங்களைக் கொண்டு இருக்கலாம்.
- எடுத்துக்காட்டாக 'பிள்ளை அழுத கண்ணீர்' நாடகத்தின் கதையானது கீழே தரப்படுகின்றது

***பிள்ளை அழுத கண்ணீர்***

குழந்தைக்கு வைத்திருந்த பாலை ஒரு எலிக்குஞ்சு குடித்துவிட்டது. பிள்ளை எழுந்து பாலுக்கு அழுதபோது குற்ற உணர்வால் எலிக்குஞ்சு பால் தேடி அலைகின்றது. அது ஆடம்மாவிடம் பாலுக்குப் போகின்றது. ஆடு தனக்கு உணவில்லை என்று சொல்லி புல்லுத் தந்தால் பால் தருவதாக கூறுகின்றது. எனவே எலி வயலம்மாவிடம் செல்லுகின்றது புல்லுத் தரும்படி கேட்கின்றது. வயலம்மா தண்ணீர் இல்லாததால் புல் இல்லை என்றும் தண்ணீர் தந்தால் புல் தருவதாகவும் கூறுகின்றது. உடனே எலி குளத்திடம் செல்லுகின்றது குளம் தன்னிடம் நீர் இல்லை என்று கூறி தனது குளக்கட்டினை கட்டினால் நீர் தருவதாகக் கூறுகின்றது. எனவே கொத்தனாரிடம் போய் குளக்கட்டினை கட்டுவதற்கு உதவி கேட்கின்றது. அதற்கு கொத்தனார் கல்லு வேண்டும் என்கின்றார். அதற்காக அது மலையக்காவிடம் போகின்றது மலையக்கா அதனது கதையை கேட்டு அதற்கு கல்லுக் கொடுக்கின்றது கல்லை வைத்து கொத்தனார் குளங்கட்ட, குளம் நீர் கொடுக்க, நீர் பெற்ற வயல் புல்லைக் கொடுக்க, புல்லைப் பெற்ற ஆடு பாலைக் கொடுக்கின்றது பாலைக் கொடுத்து பிள்ளையின் பசியை எலி ஆற்றுகின்றது.

- இது நாடகம் கூறுகின்ற கதை. ஆனால் இக்கதையினூடாக ஒருவிடயம் சொல்லப்படுகின்றது சொல்லப்படுகின்ற **விடயம்** அல்லது **செய்தியே** விடயப்பொருளாகும்.
- பிள்ளை அழுத கண்ணீர் நாடகத்தின் விடயப்பொருளாக விவசாயம் செழிப்புற்று இருந்தாலே எமக்கான உணவுப்பொருள் கிடைக்கும் எனவே விவசாயத்திற்கு வேண்டிய அனைத்தையும் மனிதர்கள் செய்ய வேண்டும் இதுவே விடயப்பொருளாகும் இந்த விடயப் பெருளை
  - பாடுபொருள்
  - மையப்பொருள்
  - சொல்லப்படும் செய்தி
  - கருப்பொருள்என்ற பெயர்களில் அழைப்பர்.

இந்த விடயப் பொருளானது ஒரு பிரதான விடயப் பொருளை கொண்டிருந்தாலும் ஒன்றிற்கு மேற்பட்ட அர்த்தப்பாடுகளை கொண்டிருக்கலாம். இந்த அர்த்தப்பாடுகளானது நபருக்கு நபர் வேறுபடலாம். எடுத்துக்காட்டாக பிள்ளை அழுத கண்ணீர் நாடகத்தில் வெவ்வேறு அர்த்தப்பாடுகள் முன்வைக்கப்படலாம்.

- வாழ்வதற்கு விவசாயம் அவசியம்
- பிறருக்குரிய பொருளை நாம் திருடக்கூடாது.
- மனித வாழ்க்கை, ஒன்றில் ஒன்று தங்கி இருக்கிறது
- நீரின்றி அமையாது உலகு

**செயற்பாடு**

பின்வரும் நாடக எழுத்துக்களை தேடி வாசியுங்கள்.

- தப்பிவந்த தாடி ஆடு – சி.மௌன குரு
- பல்லி - வேலு சரவணன்
- பாலுக்குப் பாலகன் - குழந்தை ம. சண்முகலிங்கம்

1. நாடகங்களின் கதைச்சுருக்கத்தினை எழுதுங்கள்
2. அந்நாடகங்கள் கூறுகின்ற பிரதான விடயப்பொருளை கண்டறியுங்கள்
3. அவற்றுக்கு வெவ்வேறு அர்த்தப்பாடுகள் உண்டா என்பதனை மதிப்பிடுங்கள்

**பயிற்சி வினாக்கள்**

1. நாடகத்தின் விடயப்பொருள் என்றால் என்ன?
2. விடயப்பொருளுக்கு வழங்கப்பெறும் வேறு பெயர்கள் எவை?
3. தப்பி வந்த தாடி ஆடு நாடகத்தின் விடயப்பொருள் யாது?

## 03 அரங்க வெளி (1.3)

நாடகமொன்று நிகழ்த்தப்படுகின்ற இடம் அரங்க வெளி எனப்படும். ஒரு நிகழ்ச்சி நடைபெறுகின்றது என்றால் அது ஓர் இடத்தில் நடைபெறும்

- பூசை - ஆலயம்
- விளையாட்டு – மைதானம்
- கற்றல் - வகுப்பறை
- கலைநிகழ்ச்சி – மேடை, மண்டபம்

அந்த வகையில் நாடகம் நிகழும் இடம் **அரங்க வெளி** என அழைக்கப்படுகின்றது. இதனை

- மேடை
- களரி
- ஆடுகளம்
- அரங்கம்

எனப் பல்வேறு பெயர்களில் நாம் அழைப்போம். ஆங்கிலத்தில் Theatre (அரங்கு) என்ற பதத்தில் இதனை உள்ளடக்குவர். ஏனைய நிகழ்ச்சிகளுக்கு நிகழ்த்தப்படும் இடம் முக்கியம் பெறாது இருக்கலாம். ஆனால் நாடகத்தில் வெளி மிக முக்கியமான இடத்தினைப் பெறுகின்றது. ஏனெனில் இந்த வெளிதான்.

- ஆற்றுவோரையும் பார்ப்போரையும் இணைக்கின்றது. ஒன்றுகூட்டுகின்றது
- பார்ப்போருக்கு பார்த்து இரசிப்பதற்கான தூண்டுகையை தருகின்றது.
- நடிப்போருக்கு வசதிகளை ஏற்படுத்துகின்றது
- ஒலி, ஒளி, காட்சி.. போன்ற பல்வேறு அரங்கத் துணைக் கலைகளையும் இணைப்பதற்கு வசதி கொடுக்கின்றது.
- ஆற்றுகையை தெரியச் செய்கின்றது.

அதனால் அரங்க வெளியை அரங்கின் மூலகங்களில் ஒன்றாக கருதுவர் இந்த அரங்க வெளியானது

- வட்டம், சதுரம்,… என வெவ்வேறு வடிவங்களிலோ அன்றேல் வடிவம் இல்லாத ஒன்றாகவோ அமையலாம்.
- உயர்த்தப்பட்டதாகவோ உயர்த்தப்படாததாகவோ இருக்கலாம்
- பார்ப்போரை ஒருபக்கத்திலோ அல்லது பல பக்கங்களிலோ அனுமதிப்பதாக அமையலாம்

உதாரணமாக எமது பாரம்பரியக்கூத்துக்கள் வட்டமான அரங்க வெளியில் நிகழ்த்தப்படும்



- இதனை **கூத்துக்களரி** அல்லது **வட்டக் களரி** என்று அழைப்பர்
- இது சற்று உயர்த்தப்பட்டிருக்கும்
- பார்ப்போர் சுற்றிவர அமர்ந்திருப்பர்

அவ்வாறே நவீன அரங்குகளிலொன்றாக உலகமெங்கும் பயன்படும் அரங்க வெளி இதுவாகும்.





- இதனை **படச்சட்ட மேடை,** அல்லது **புறோசீனியம் மேடை** என அழைப்பர்
- இது ஒருமுக அரங்க வெளி
- பார்ப்போர் ஒருபக்கம் மட்டும் இருப்பர்
- உயர்த்தப்பட்டிருக்கும்
- மறைப்புத் திரைகள் பயன்படுத்தப்படும்

இப்படி வடிவம் இல்லாத அரங்கவெளிகளும் நாடகங்களில் பயன்படுத்தப்படலாம்

- தெருவெளி
- வகுப்பறை
- மைதானம்
- மரநிழல்

**செயற்பாடுகள்**

- வெவ்வேறு அரங்க வெளிகளின் படங்களை தேடிச் சேகரியுங்கள்
- இணையத்தளங்கள் மூலமாக அரங்கவெளிகளைப் பார்வையிடுங்கள்
- வீட்டில் சகோதரர்களுடன் இணைந்து ஆடல், பாடல்கள், அல்லது நாடகங்களை வெவ்வேறு இடங்களில் நிகழ்த்திப்பாருங்கள.

**பயிற்சி வினாக்கள்**

1. அரங்க வெளி என்றால் என்ன?
2. அரங்கவெளி எவ்வாறு அமைய வேண்டும் ?
3. சமதரையான அரங்க வெளிக்கும், உயர்த்தப்பட்ட அரங்க வெளிக்கும் உள்ள சாதக பாதக நிலைகள் யாவை?
4. படச்சட்ட மேடை ஒன்றின் படம் வரைக?

## 04 உள்ளுறைப் பண்புகளைப் போலச்செய்தல் (1.4)

-நடிகன் தனது நடிப்புச் செயற்பாட்டில் 'மனிதர்கள்' 'பிராணிகளின்' உள்ளுறைப் பண்புகளைப் போலச் செய்ய வேண்டியவனாகின்றான்.

-நடிகன் பாத்திரமொன்றின் இயல்புகளைப் பார்த்து தனது உடல் குரல் என்பவற்றைப் பயன்படுத்தி அந்த இயல்புகளை பாவனை செய்வதனையே **போலச்செய்தல்** என்பர். பாத்திரங்கள் ஒவ்வொன்றுக்கும்

- பௌதீகப்பண்புகளும்
- உள்ளார்ந்த இயல்புகளும் காணப்படும்

-பௌதீகப்பண்புகள், வெளித்தெரிகின்ற **தோற்றம், நடை ,உடை, பாவனைகளாகும்**. உள்ளார்ந்த பண்புகள் அல்லது உள்ளுறைப் பண்புகள் உணர்வுடன் தொடர்புபட்டவை செயல்களின் மூலமாகவே வெளிக்காட்டப்படுபவை

-நடிகன் நாடகத்தில் ஒரு கதாபாத்திரத்தினை சித்திரிக்கும்போது அப்பாத்திரத்தின் பௌதீக உள்ளுறைப் பண்பகளை நன்கு அவதானித்து போலச்செய்வதன் மூலமே அப்பாத்திரத்தினை சிறப்பாகச் சித்திரிக்க முடியும்.

***உள்ளுறைப் பண்புகளைச் சித்திரித்தல்***

பாத்திரங்களின் உள்ளுறைப்பண்புகள் என்பது அவற்றின் குணம் மற்றும் உணர்வுகள் சார்ந்ததாகும் உள்ளுறைப் பண்புகளை நன்கறிந்து அதனைச் சித்திரிக்கும் போதே முழுமையான பாத்திரச் சித்திரிப்பினை மேற்கொள்ள முடியும் உள்ளுறைப் பண்புண்புகளை உடல் மொழியினாலேயே வெளிப்படுத்த முடியும்

- உடலின் நிலைகள்
- அசைவுகள்
- சைகைகள்
- குரல்வெளிப்பாடுகள்

மூலமாக உள்ளுறைப் பண்புகளை உணர்வுகள் மூலம் வெளிப்படுத்த முடியும். உள்ளுறைப் பண்புகளுக்கு உதாரணமாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்

- பசி
- தாகம்
- கோபம்
- பயம்
- மகிழ்ச்சி
- பொறாமை
- இரக்கம்
- ஆசை
- வியப்பு…

இவை விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் வேறுபட்டுக் காணப்படும். அவதானிப்பினூடாகவே அவற்றினை சரியாகச் சித்திரிக்க முடியும்

*போலச்செய்யும்போது கவனிக்கவேண்டியவை*

- போலச்செய்தலுக்கு அவதானம் அவசியம்
- உள்ளார்ந்த இயல்புகளைப் போலச்செய்வதற்கு வாழ்வனுபவங்கள் அவசியமானவை
- உள்ளார்ந்த இயல்புகளை போலச்செய்வதற்கு நடிகனின் **உடல், குரல், உணர்வுகள்** (முக பாவங்கள்) என்பன முக்கிய இடம்பெறுகின்றன.
- மனிதர்கள் பிராணிகளின் உள்ளார்ந்த இயல்புகளை போலச்செய்யும்போது அவற்றின் இயல்புகள் விருப்பு வெறுப்புக்கள் சந்தர்ப்ப சூழ்நிலைகளில் அவற்றின் இயல்புகள் போன்ற பல் வேறு அம்சங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நடிப்புச் செயற்பாட்டிற்கு இத்தகைய போலச்செய்தலும் பயிற்சிகளும் அனுபவங்களும் பெரிதும் உதவுகின்றன.

**செயற்பாடு**

பின்வரும் சூழமைவுகளில் மனிதரின்,விலங்குகளின் உள்ளார்ந்த இயல்புகள் எவ்வாறு தொழிற்படும் என்பதனைச் செய்துபாருங்கள்

- வீதியில் ஒரு தொகைப்பணத்தினைக் காணுதல்
- வாகன விபத்தில் சிக்கி உள்ள ஒருவரைக் காணுதல்
- பூனை ஒன்று கருவாட்டைக் காணுதல்
- நாய் பசியுடன் அலைதல்

**பயிற்சி வினாக்கள்**

1. போலச்செய்தல் என்றால் என்ன?
2. பாத்திரத்தின் அடிப்படையான இரண்டு பண்புகளும் எவை ?
3. உள்ளுறைப் பண்புகளுக்கு உதாரணம் தருக ?
4. வீட்டு நாய் ஒன்றின் உள்ளுறைப் பண்புகள் சில தருக ?
5. நடிகன் பாத்திரமொன்றின் உள்ளுறைப் பண்புகளை எவ்வாறு வெளிப்படுத்துகின்றான்.?

## 05 இயற்கை உலகின் வடிவங்களைப் போலச்செய்தல் (1.5)

- இயற்கை உலகம் என்பது மனிதனால் உருவாக்கப்படாது தாமாகத் தோற்றம் பெற்ற சூழலின் பல்வேறு அம்சங்களாகும்.
- இயற்கையை நாம் நன்கு அவதானிக்கும் போது அதில் பல்வேறு வடிவங்களையும் வர்ணங்களையும் அழகியல் பூர்வமான அனுபவங்களையும் பெற முடியும்

*உதாரணமாக* பின்வரும் காட்சிகளைக் குறிப்பிடலாம்

- பசுமையான வயல்கள்
- தேயிலைத் தோட்டம்
- பனை வெளிகள்
- அலைமோதும் கடற்கரை
- கடற்கரையில் தோன்றும் சூரியோதயம்
- மலைத் தொடர்கள்
- அவற்றினூடகத் தெரியும் சூரியன்
- பாய்ந்தோடும் அருவிகள்
- ஆற்றில் நீந்தும் பறவைகள்
- வானத்தில் கூட்டமாயப் பறக்கும் பறவைகள்
- முற்றத்து நிலா ஒளி
- காற்றுக்கு அசையும் கடல் அலைகள்
- பொழிகின்ற மழை

நாம் சூழலில் காணும் இத்தகைய வடிவங்கள், இயற்கை அழகை வெளிப்படுத்துவனவாக இருக்கும் அதே வேளை அவற்றில்

- வடிவங்கள்
- வண்ணங்கள்
- ஒத்திசைவு
- லயம்
- ஓசை

எனப்பல விடயங்கள் உள்ளடங்கி இருக்கும்

- **வடிவங்கள்** - வட்டம்,சதுரம்,அரைவட்டம்,முக்கோணம்..
- **வர்ணங்கள்** - பச்சை,மஞ்சள்,சிவப்பு…
- **ஒத்திசைவு** – ஒன்றுபட்டு அசையும் அல்லது இயங்கும் தன்மை
- **லயம்** - குறிப்பிட்ட தாளகதியில் அசைவுகள், ஓசைகள் அமைந்திருத்தல்
- **ஓசை** – ஒலி,சத்தம்

இயற்கையை நன்கு அவதானிப்பதன் மூலமாக அதனைப் போலச் செய்யமுடியும்

ஒவ்வொரு இயற்கைத் தோற்றப்பாட்டிலும் லயம் காணப்படும்

*உதாரணமாக*

- நீர்வீழ்ச்சியின் அசைவு
- வயல்வெளி நெற்கதிரின் அசைவு
- காற்றுக்கு மரங்கள் அசைதல்

ஒவ்வொன்றிலும் ஒரு லயம் காணப்படும் எனவே இயற்கையின் காட்சிகளை நடிகன் தனது உடல் மொழியின் மூலமாக வெளிப்படுத்த முடியும்.

**செயற்பாடு**

இயற்கையான விடயங்களை வீட்டில் விளையாட்டாகச் செய்து பாருங்கள்

- மரம் காற்றிற்கு மெதுவாக அசைவது.. புயல் ஏற்பட்டால் அசைவது..
- கடல் அலைகளைப் போல் உடலை வளைத்து அசையுதல்
- நீர் வீழ்ச்சி ஒன்று உருவாகி பல்வேறு இடங்களுக்கும் ஓடுவது..

## 06 கதைகளைத் தழுவி நாடகம் எழுதுதல் (2.1)

நாடகம் எழுதுவதென்பது ஒரு கலை. நாடகமென்ற கலை வடிவத்தின் அடிப்படையான அம்சங்களை விளங்கிக்கொண்டவர்களால் நாடகங்களை எழுத முடியும்.

*ஒரு நாடக எழுத்துருவில்*

- ஒரு கதை சொல்லப்படும்
- பாத்திரங்கள் காணப்படும்
- பாத்திரங்கள் பேசுகின்ற உரையாடல்கள் காணப்படும்
- முரண்பாடு அல்லது மோதுகைகள் இருக்கும்
- காட்சிகள் மூலமாகவோ, அல்லது சம்பவங்கள் மூலமாகவோ கதை வளர்த்துச் செல்லப்படும்
- தொடக்கம் - நடு- முடிவு என ஒரு வளர்ச்சி ஒழுங்கு காணப்படும்
- சிறுவர் நாடகங்களாயின் ஆடல், பாடல், விளையாட்டு அம்சங்கள் அதிகம் காணப்படும்

**1.பாத்திரங்கள்**

கண்டறியாத கதை நாடகத்தின் பாத்திரங்கள்

வரிக்குதிரையார்,குரங்கார்,மானார், நரியார்,ஆந்தையார்,கரடியார்,பிள்ளைகள்

**2.சொல்லாடல்கள் / உரையாடல்கள்**

(கண்டறியாத கதை நாடகத்தில் இருந்து)

ஆந்தையார் :- வெளிச்சமோ இருட்டோ கண்பார்க்கிறதில்லை

கரடியார்:- கண்பார்க்கிறதில்லையோ இதென்னடாப்பா இது ?

வரிக்குதிரை :- கண்பார்க்காமல் மூக்கே பார்க்குது

குரங்கார் :- அல்லது காதே பார்க்குது

மானார்:- இல்லையெண்டால் வாயே பார்க்குது ?

நரியார் :- அல்லது உடம்புதான் பாரக்குது எண்டு சொல்லுவாரோ ஆந்தையார்

ஆந்தையார் :- கண்பார்க்கிறதில்லை..

ஏனையோர் :- பேந்தும் பார்!

ஆந்தையார் :- நான் நினைக்கிறதை சொல்லி முடிக்க விடுங்கோவன். அதுக்கிடையில என்னை முடிக்க நிக்கீறிர்கள்

**3. முரண்பாடு**

மேற்படி உரையாடலில் ஆந்தையாரின் கருத்துடன் கரடியார், வரிக்குதிரையார், குரங்கார், நரியார், அனைவரும் முரண்படுகின்றனர் இப்படியான கருத்துக்களால், குணஇயல்புகளால், சம்பவங்களினால் முரண்பாடுகள் தோன்றும் போதே நாடகம் வளர்த்துச் செல்லப்படும். அதேவேளையில் பார்ப்பதற்கான தூண்டுகையும் அதிகரிக்கும் முரண் இல்லாதுவிடின் அது நாடகமல்ல.

**4. காட்சிகள்**

காட்சி1,

காட்சி2… என காட்சிகளினூடாக கதையை வளர்த்துச் செல்லலாம். அல்லது காட்சிகளை இலக்கம் போட்டுப் பிரிக்காது சம்பவங்களையும் வளர்த்துச் செல்ல முடியும். ஆயினும் வளர்ச்சி நிலையானது படிப்படியாக உயர்ந்து சென்று முடிவதாக, **தொடக்கம் - நடு – முடிவு** என ஓர் ஒழுங்கில் அமைதல் நன்று

**நாடகத்திற்குப் பொருத்தமான கதைகளைத் தெரிவுசெய்தல்**

- சிறுவர் நாடகங்கள் பெரும்பாலும் கதைகளைத் தழுவியே உருவாக்கப்படகின்றன. எனவே நாடகமாக்குவதற்குப் பொருத்தமான கதைகளை தெரிவு செய்ய வேண்டும்
- எல்லா கதைகளையும் நாடகமாக்க முடியாது
- சிறுவர்களின் உளவயதுக்குப் பொருத்தமான கதைகளைத் தெரிவுசெய்ய வேண்டும்
- நாடகமாக்கக் கூடிய முரண்பாடுள்ள கதைகளை இனங்காண வேண்டும்
- எத்தனை பாத்திரங்களை கொண்டுள்ள கதை என்பதனை நோக்கவேண்டும்
- சிறுவர்களை கவரக்கூடிய இரசனையைக் கொண்ட கதையாக இருக்க வேண்டும்
- வேடிக்கை வினோதம், நகைச்சுவை என்பவற்றுடன் சிறுவர்களுக்குரிய செய்தி, விடயப்பொருளை கொண்ட கதைகளை தெரிவுசெய்ய வேண்டும்

இவ்வாறு தெரிவுசெய்த கதைகளே இங்கு அதிகம் நாடகமாக்கபட்டன. உதாரணமாக

- ‘புத்திமான பலவான்’ என்ற பஞ்ச தந்திரக் கதையையே குழந்தை ம. சண்முகலிங்கம் “முயலார் முயல்கின்றார்” என்ற நாடகமாக்கினார்.
- பழைய 5ஆம் வகுப்பு தமிழ் பாடநூலில் இருந்த ‘தாடி ஆடு” என்ற கதையையே சி. மௌனகுரு “தப்பிவந்த தாடி ஆடு” என்ற நாடகமாக்கினார்
- The Stange Shoe என்ற ஆங்கிலக் கதையை தழுவியே குழந்தை ம. சண்முகலிங்கம் “கண்டறியாத கதை” என’ நாடகமாக எழுதினார்

எனவே நாடகமாக்கக்கூடிய கதைகளை கண்டுபிடிக்க வேண்டும்.

- பஞ்சதந்திரக்கதைகள்
- பீர்பால் கதைகள்
- தெனாலி இராமன் கதைகள்
- நாடோடிக் கதைகள்
- நாட்டார் கதைகள் போன்றவற்றில் இருந்து கதைகளைத் தெரிவு செய்யமுடியும்

**செயற்பாடு**

- வழங்கப்பட்ட நாடக எழுத்துருக்களை தேடி வாசியுங்கள்
- பொருத்தமான கதை ஒன்றினை தெரிவுசெய்து நாடகமாக எழுதுங்கள்
- எழுதிய நாடகத்தினை நடித்துப் பாருங்கள்

**பயிற்சி வினாக்கள்**

1. நாடகமாக்கக் கூடிய கதையில் என்னென்ன அம்சங்கள் அமைந்திருக்க வேண்டும் ?
2. முரண் என்றால் என்ன ?
3. உரையாடல்களுக்கு எத்தகைய மொழியைப் பயன்படுத்தவேண்டும் ?
4. நாடகம் எழுதும் போது நீர் எதிர்கொண்ட சவால்கள் எவை?

## 07. சூழமைவுகளைச் சித்திரித்தல் (2.2)

சூழமைவு என்பது சமூகத்தில் நாம் காணுகின்ற ஒரு செயல் இயக்கமாகும். மனிதர்கள் சமூகமாக வாழ்கின்றார்கள், குடும்பம், கிராமம், நகரம், மாவட்டம், மாகாணம்…என எமது சமூக அமைப்பு விரிவடைந்து செல்கின்றது. இது மனித வாழ்வியலோடு தொடர்புபட்டே நோக்கப்படுகின்றது இவ்வாறான வாழ்வியலில் பல்லாயிரக் கணக்கான “சூழமைவுகள்” நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. அவற்றினை நாம் நாடகங்களில் சித்திரிக்கின்றோம் உதாரணமாக ‘ஒரு மரக்கறிச்சந்தை’ என்ற சூழமை எடுத்துக் கொண்டால் அங்கு

- விற்பவர்கள்
- வாங்குபவர்கள்
- மொத்த வியாபாரிகள்
- சில்லறை வியாபாரிகள்
- வரிவசூலிப்பவர்கள்
- கூலிவேலை செய்பவர்கள்…

எனப்பலர் கூடுவார்கள். அங்கு

- விற்றல்
- பேரம்பேசுதல்
- வாங்குதல்
- பொருட்களை இறக்குதல்

- பொருட்களை நிறுத்துக்கொடுத்தல்
- முரண்படுதல்
- வரி வசூலித்தல்
- தெரிந்தவர்கள் உரையாடுதல்
- வியாபாரிகளுடன் உரையாடுதல், முரண்படுதல்…

என எத்தனையோ செயல்கள் இங்கு இடம்பெறுகின்றன. இந்த செயல் நிறைந்த சூழமைவை நடிகன் தான் பார்த்த அனுபவத்தினைக் கொண்ட மீளச்செய்து காட்டுகின்றான் அதனையே சித்திரித்தல் என்கின்றோம்.

**செயற்பாடு**

- நாளாந்த வாழ்வில் காணும் சூழமைவுகள் சிலவற்றைப்பட்டியலபடுத்துங்கள்
- அதழல் நாடகத்திற்குப்பொருத்தமான சூழமைவுகளை இனங்காணுங்கள்
- வீட்டில் சகோதரர்களுடன் சில சூழமைவுகளைச்செய்து பாருங்கள்

## 08. மனித பாத்திரங்களின் உள்ளார்ந்த இயல்புகளைச் சித்திரித்தல் (2.3)

பாத்திரச்சித்திரிப்பு ஒன்றில் பௌதீக வெளிப்பாடுகளும், உள்ளார்ந்த வெளிப்பாடுகளும் முக்கியம் பெறுகின்றன என்பதனை ஏற்கனவே நோக்கினோம்.

இங்கே நமது அன்றாடவாழ்வில் காணப்படுகின்ற மனிதப் பாத்திரங்களின் உள்ளார்ந்த இயல்புகளை நோக்கிடுவோம்.உள்ளார்ந்த இயல்புகளானவை

- செயல்கள்
- சைகைகள்
- நிலைகள்
- ஒலிக்குறிப்புக்கள்
- உரையாடல்முறை
- முக உணர்வு வெளிப்பாடு

என்பவற்றின் மூலமாகவே வெளிப்படுத்தப்படுகின்றது. ஆனால் பௌதீக பண்புகள்

- பாத்திரத்தின் வயது
- பால்
- சமூக அந்தஸ்து
- காலம்
- உயரம்
- பருமன்…. என்பவற்றால் வெளிப்படுத்தப்படலாம். ஆனால் உள்ளார்ந்த இயல்புகள் நடிகனின் நுணுக்கமான செயற்பாடுகளினாலேயே வெளிப்படுத்தப்பட முடியும்

பின்வரும் பாத்திரங்களின் உள்ளார்ந்த இயல்புகளை நோக்கினால்,

- கோபக்காரத் தந்தை
- முரட்டுத்தனமான பொலிஸ்காரன்
- பயந்த சுபாவம் உடைய மாணவன்

உள்ளார்ந்த இயல்புகளை வெளிப்படுத்துவதில் உடல் மொழி, சைகைகள் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன.

- யோசனையில் ஆழ்ந்திருத்தல்
- கையை கன்னத்தில் வைப்பது

- முகத்தைச் சுருக்குவது
- வாயில் பேனா வைத்திருத்தல்
- அமர்ந்திருக்கும் முறை…. போன்றவைகளினால் உணர்வுகளை வெளிப்படுத்த முடியும்.

உதாரணமாக ‘அதிகாரத்தன்மையான’ ஒருவரைச் சித்திரிக்கும்போது

- நிமிர்ந்து நடத்தல்
- குறைந்த புன்னகை
- அதிகம் பேசாமை
- தளர்ச்சியற்ற நடை….

போன்ற உடல்மொழிகளால் வெளிப்படுத்த முடியும் அதனைவிட சொற்கள், ஏற்ற இறக்கமான குரல் அழுத்தங்கள், ஒலிகள், பெரு மூச்சு, கண்ணீர், மௌனம்…போன்ற செயற்பாடுகளாலும் உள்ளார்ந்த இயல்புகளைப் பிரதிபலிக்க முடியும்.

உள்ளார்ந்த இயல்புகளைப் போலச்செய்வதற்குப் பின்வரும் வகையில் ஒரு செயல் ஒழுங்கு அவசியமானது.

- அவதானம்
- கருத்தூன்றல்
- பகுப்பாய்வு
- கற்பனை
- மீள்படைப்பு

## 09. சொல்லாடல் (3.1)

நாடகத்தின் முக்கியமான கருத்து வெளிப்பாட்டு ஊடகமாக சொல்லாடல்கள் காணப்படு கின்றன. இதனை **உரையாடல்கள், வார்த்தைகள், கிழவிகள்** என்று அழைப்பர். நாடகத்தில் எழுதப்படுகின்ற சொல்லாடல்கள் நாடகத்தில் பேசப்படுவதற்காகவே எழுதப்படுகின்றன. எனவே நடிகன் சொல்லாடல்களை சிறப்பாக ஒப்புவிக்கும் போதே கருத்துக்களும் சிறப்பாக வெளிப்படுத்தப்படும்.

*சொல்லாடல்களானவை*

- பேச்சு மொழி
- செம்மையான மொழி
- கவிதை
- பாடல்…. வடிவங்களில் அமையப்படலாம்

எனவே ‘பஞ்சவர்ண நரியார்’, ‘தப்பி வந்த தாடி ஆடு’, ‘கண்டறியாத கதை’ போன்ற நாடக பாடங்களை சத்தமாக வாசித்துப் பாருங்கள். நாடகத்தில் பேசப்படுவது போலவே பேசுங்கள். இவ்வாறு பேசும்போது சில நுட்பங்களை விளங்கிக் கொண்டு சொல்லாடல்களை உச்சரிக்கும் போதே அவை முழுமையாக பார்ப்பவரை சென்றடையும் என்பதனை விளங்கிக்கொள்வீர்கள். பின்வரும் விடயங்கள் சொல்லாடலில் முக்கியத்துவம் பெறுகின்றன.

**1.தொனிப்பிரயோகம்** :-ஒருவரிடம் இயல்பாக இருக்கின்ற குரல். அதனை வெளிப்படுத்துகின்ற போது தெரிகின்ற வீச்சு

**2.ஏற்ற இறக்கம் :-** குரலை சந்தர்ப்பத்திற்கு ஏற்ப ஏற்றியும் இறக்கியும் பேசும் முறை

**3.குரலின் புறத்தெறிகை :-** குரலை வெளிப்படுத்தும் போது(எறியும் போது)தொனிக்கின்ற அர்த்தங்கள், உணர்ச்சி வெளிப்பாடுகள்

**4.உணர்வு வெளிப்பாடு :-** குரலுக்குள் வெளிப்படும் உணர்ச்சி பாவம்

**5.லயபூர்வமான ஒலிப்பு :-** பேசும் வார்த்தைகளுக்குள் உள்ள தொடர்ச்சி அழகுடன் அமைதல்

இவற்றினை நன்கு விளங்கிக்கொண்டு சொல்லாடல்களை நிகழ்த்தும் போது கருத்து வெளிப்பாடு சாத்தியமானதாக இருக்கும்.

நாடகத்தில் சொல்லாடல்களானவை பல்வேறுவகையில் நாடகத்தினை நகர்த்திச்செல்வதற்கு உதவுகின்றன.

**சொல்லாடல்களின் பயன்பாடுகள்**

- கருத்துக்களை வெளிப்படுத்துகின்றன
- உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன
- கதையை நகர்த்துகின்றன
- பாத்திரப் பண்புகளை வெளிப்படுத்துகின்றன
- கதையை சொல்கின்றன

- இத்தகைய சொல்லாடல்கள் நாடகத்தில் முழுக்க முழுக்க நடிகனின் குரல் மூலமாகவே வெளிப்படுத்தப்படுகின்றன. அதனால் நடிகன் அதன் நுட்பங்களை நன்கு விளங்கி ஆற்றுகையை மேற்கொள்ள வேண்டும்.
-

**செயற்பாடு**

- மேலே தரப்பட்ட நாடக நூல்களிலொன்றின் சொல்லாடல்களை உரத்து வாசியுங்கள்
- மீண்டும் உணர்வுபூர்வமாக வாசியுங்கள்
- ஏற்ற இறக்கங்களுடன் வாசியுங்கள்
- உங்களிடம் ஒலிப்பதிவு செய்யக்கூடிய வசதி இருப்பின் நீங்கள் வாசிப்பதனை தொலைபேசியில் ஒலிப்பதிவு செய்து அதனை மீளவும் கேளுங்கள்
- மீளவும் செம்மையுற வாசியுங்கள்

**பயிற்சி வினாக்கள்**

1. சொல்லாடலுக்கு வழங்கப்படும் வேறு சொற்களை எழுதுக?
2. நாடகமொன்றில சொல்லாடலின் பயன்பாடு யாது ?
3. சொல்லாடல்களை நிகழ்த்தும் போது கடைப்பிடிக்கவேண்டிய நுட்பங்கள் எவை ?
4. சொல்லாடல்களுக்கு பயன்படுத்தும் மொழிப் பாவனைகளை எழுதுக?

## 10. குரலுக்கான பயிற்சிகள் (3.3)

- சொல்லாடல்களையும் ஒலிகளையும் வெளிப்படுத்துவனவாக நடிகனின் குரல் காணப் படுகின்றது.
- நடிகனின் பிரதான வெளிப்பாட்டு மூலகங்களில் ஒன்று குரலாகும்.
- நடிகனின் குரலானது இயற்கையானது. அது கொடை என்று சொல்வார்கள். அதனால் குரலை மாற்ற முடியாது. ஆனால் பண்படுத்தலாம்.
- நல்ல முறையில் பண்படுத்தப்படும் குரலே நடிகனின் பலம் மிக்க ஆயுதம் ஆகும்.
- நடிகனின் குரலானது பின்வரும் 5 இடங்களுக்கு கொடுக்கப்படும் அழுத்தங்களால் ஒலி வேறுபாடுகளை தோற்றுவிக்கக் கூடியது.

1. அடிவயிறு
2. நெஞ்சு
3. தொண்டை
4. நாசி
5. உச்சந்தலை

- குரலுக்கான பயிற்சிகளும் பல்வேறு ஒழுங்குகளில் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறான பயிற்சிகளை நீங்களும் மேற்கொண்டு பாருங்கள்.

**1.சுவாசப்பயிற்சி**

குரலுக்கு அடிப்படையானது சுவாசம் ஆகும். எனவே குரல் பயிற்சிகளுக்கு அடிப்படையாக முதலில் சுவாசப் பயிற்சிகளே மேற்கொள்ளப்படும்.

- காற்றோட்டமான இடத்தில் நிமிர்ந்து நில்லுங்கள்
- மனதை ஒரு நிலைப்படுத்துங்கள்
- சுவாசத்தை உள்ளெடுத்து வெளிவிடுங்கள்
- உள்ளெடுக்கும் நேரத்தை விட வெளிவிடும் நேரம் இரட்டிப்பாக இருக்க சுவாசியுங்கள்.
- காற்றை மூக்கினால் உள்ளெடுத்து வாயினால் வெளிவிடுங்கள்.
- பின்பு வெளிவிடும் போது சத்தத்துடன் வெளிவிடுங்கள்.

**2. ஒலிகளை எழுப்புதல்**

குரல் பயிற்சிகளில் பறவைகள், விலங்குகள் போல ஒலியெழுப்புவதும் ஒரு பயிற்சியாகும்.

- சூழலில் அமைதியாக நில்லுங்கள்
- கண்களை மூடி அவதானியுங்கள்
- பறவைகளின் ஒலிகளை கூர்மையாக அவதானியுங்கள்
- எழுப்பக்கூடிய ஒலிகளை உங்கள் குரலினால் எழுப்ப முயலுங்கள்
- காகம், கிளி, சேவல், நாய், பூனை, கழுதை, உந்துருளி, தொடரூந்து.. போன்றவற்றின் ஒலிகளை உங்கள் குரலால் ஒலிப்பதற்கு கற்றுக்கொள்ளுங்கள்.

**3. சொற்கள்,கவிதைகளை உச்சரித்தல்**

குரல் பயிற்சிகளில் பல்வேறு படிமுறைகள் காணப்படுகின்றன.தொடர்ந்து ஒலிகள், சொற்கள், கவிதைகளை உச்சரிப்பதனை பயிற்சியாக மேற்கொள்ள முடியும்.

- சுவாசப்பயிற்சி செய்து கொள்ளுங்கள்
- உள்ளெடுக்கும் காற்றை ஓசையுடன் வெளிவிடுங்கள்
- வல்லின,மெல்லின,இடையின சொற்கோவைகளை உச்சரியுங்கள்
- *உதாரணமாக:-* ட…டு…டி
- ற…று…றி
- ல…லு…லீ
- வ…வு…வீ
- சில ஒத்த ஓசைச் சொற்களை உரத்து வாசியுங்கள்
- கற்றாளை…வத்தாளை
- இளவாழை…இளவாலை
- சொற்றொடர்கள், கவிதைகள், தாளக்கட்டுக்கள் என்பவற்றை சத்தமாக லயத்துடன் உச்சரியுங்கள்.
- எங்கட தச்சன் சுத்தத் தச்சன்
- செத்தை சத்தகம் குத்திச் செத்தான்
- ஓடுற நரியில ஒரு நரி கிழ நரி
- கிழ நரி முதுகில ஒரு பிடி நரை முடி
- தத்தித் தகணக தகதித் தகணக

- குரலானது இயற்கையாக அமைவது
- குரலுக்கு பயிற்சி வழங்கும் போது அதன் இயல்பிலிருந்து அதனை கனதிமிக்கதாய் ஆக்கலாம்
- நடிகன் பயிற்சிகளின் மூலமாக குரலை பண்படுத்தலாம்
- குரலின் தொனி, வீச்சு, சுருதி, ஏற்ற இறக்கம், உணர்ச்சி வெளிப்பாடு, புறத்தெறிகை போன்ற நுட்பங்களை விளங்கி பயிற்சி பெறும் போது சிறந்த முறையில் உரையாடல்களை மேற்கொள்ள முடியும்.

**பயிற்சி வினாக்கள்**

1. நடிகன் பயன்டுத்தும் சொந்த மூலகங்கள் எவை ?
2. பயிற்சிகளினூடாக நடிகனின் குரலை மாற்றமுடியுமா?
3. குரல் பயிற்சியின் நன்மைகள் எவை?
4. குரலின் நுட்பங்களாக் கருதப்படுபவை எவை?

## 11. நாட்டாரியலில் காணப்படும் அறிவியல் கூறுகள் (4.1)

'நாட்டார்' என்ற சொல்லினால் குறிப்பிடப்படுபவர்கள் 'கிராமப்புற மக்கள்' நகர வாழ்க்கைக்குப் பழக்கப்படாது பாரம்பரியமான தமது சமூக அமைப்பைப் பேணி வாழ்ந்து வருபவர்கள்.

- பரம்பரை பரம்பரையாக தமது தொழில்களை செய்து வருபவர்கள்(விவசாயம்)
- முன்னோரின் பாரம்பரியங்களை செவிவழியாக கேட்டு அதன்படி வாழ்பவர்கள்
- பாரம்பரியமான வாழ்க்கை முறையையே கொண்டிருப்பவர்கள்.(உணவு,உடை,உறையுள்)
- பாரம்பரிய சடங்குகள், சமயவழிபாட்டு முறை நம்பிக்கைகளை கைக்கொண்டு வாழ்பவர்கள்.

இத்தகைய கிராமப்புற மக்களது விடயங்களை வெளிப்படுத்துவதனை **'நாட்டார் இயல்'** என்பார்கள்.

- நாட்டார் கதைகள்
- நாட்டார் விளையாட்டுக்கள்
- நாட்டார் கலைகள்
- நாட்டார் தொழில் நுட்பங்கள்
- நாட்டார் மருத்துவம்....

என பல்வேறு விடயங்களையும் நாட்டார் இயல் என்ற பதத்தின் கீழ் எடுத்துரைப்பார்கள். தரம் 6 இல், நாட்டார் கதைகள், நாட்டார் விளையாட்டு போன்ற விடயங்கள் கற்கப்பட்டன.

***அறிவியல் கூறுகள்***

நாட்டார் அல்லது கிராமத்தவர் சார்ந்த வாழ்வியல் அம்சங்களை ஒரு காலத்தில், அறிவியல் சார்ந்து நோக்காது அவற்றினை நிராகரித்தனர். ஆனால் அண்மைக்கால உலகளாவிய ஆய்வுகளில் அவற்றில் பொதிந்துள்ள அறிவியல் உண்மைகளையும், எம்முன்னோரின் அறிவியல் வளர்ச்சிகளையும் ஆச்சரியத்துடன் உலகம் நோக்குகின்றது. அந்த வகையில் எமது ஈழத்து தமிழ் பண்பாட்டில் ஊறிப்போயுள்ள எமது நாட்டாரியலில் காணப்படும் அறிவியல் கூறுகளையும் நாம் அறிந்து கொள்வது அவசியமாகும்.

எமது நாட்டாரியலில் பல்வேறு அறிவியல் துறை சார்ந்த விடயங்கள் காணப்படுகின்றன.

- நாட்டுப்புற வைத்தியம்
- வான சாஸ்திரம்/கிரகபலன்
- கிராமிய விவசாயம்
- குளங்கள் போன்ற கட்டுமானங்கள்
- கைவினைப் பொருட்கள் தயாரித்தல்....

போன்றதான பல்வேறு விடயங்களிலும் இன்று அறிவியல் உணரப்படுகின்றது. உதாரணமாக, இன்று மேற்கத்தேய மருந்துகள் பல பக்க விளைவுகளை உண்டு பண்ணுவதை மருத்துவ உலகம் ஏற்றுக்கொள்ளும் அதே வேளை, எமது நாட்டுப்புற வைத்தியமானது மூலிகைகளிலிருந்து செய்யப்படும் போது அதிக பலனும் அதே வேளை பக்கவிளைவு அற்றும் இருப்பது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

**பாரம்பரிய அரங்கும் அறிவியலும்**

அவ்வாறே எமது பாரம்பரிய கலைகள், அவைசார்ந்த துணைக்கலைகள் போன்ற பலவற்றிலும் அறிவியல் அம்சங்கள் விரவிக்காணப்படுகின்றன.


- கொம்பு முறித்தல் சடங்கிற்கான கொம்பினை தயார் செய்தல்
- மகிடிக்கூத்துக்களில் பயன்படுத்தப்படும் வித்தைகள்
- கூத்துக்கான ‘வட்டக்களரி’ அமைத்தல்
- மட்டக்களப்பில் நிகழ்வுக்கான வரவேற்பு வளைவாகிய ‘தோரணம்’ செய்தல்
- இசைக்கருவிகளான மத்தளம்,உடுக்கு,தப்பு,சேமக்கலம் போன்றவற்றை உருவாக்குதல்
- ‘உடக்குப்பாஸ்’ எனப்படும் பொம்மலாட்ட நிகழ்வில் பாவைகளை இயக்குதல்….

எமது பாரம்பரிய தொழில் நுட்பங்களான ‘கொம்பு தயாரித்தல்,’ ‘மத்தளம் கட்டுதல்’ ஆகிய நுட்பங்களை நீங்கள் அறிந்து கொள்ளவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.


**01.‘கொம்பு’ தயாரித்தல்**

மட்டக்களப்பில் கண்ணகி அம்மன் வழிபாட்டோடு தொடர்புடையதாகக் காணப்படும் ஒரு சடங்கே ‘கொம்புமுறி’ விளையாட்டாகும். பல்வேறு காரணங்களால் மனிதன் துன்பத்துக்குள்ளாகும் போது அவற்றில் இருந்து காக்கும்படி கண்ணகி அம்மனை வேண்டி அவரை குளிர்விக்கின்ற நடவடிக்கை களில் ஒன்றாகவே இக்கொம்பு முறியும் காணப்படுகின்றது. தமது கிராமத்தினை ‘வடசேரி’ ‘தென் சேரி’ எனப் பிரித்து கொம்புகளைப் பிணைத்து குழுவாக இழுக்கும் போது யாருடைய கொம்பு உடைகின்றதோ அவர்கள் தோற்றவர்களாக கருதப்பட்டு வென்றவர் கூறும் பணிகளை விளையாட்டாக ஆற்றும் பாரம்பரியம் அங்கு காணப்படுகின்றது. இதில் இந்தக் கொம்புகளைத் தயாரிப்பது என்பது மிகவும் நுட்பமான பணியாகும்.

- கொம்பானது வலுவான மரங்களில் இருந்து செய்யப்படும். **‘கரையாக்கு’** என்னும் ஒருவகை மரத்தில் இருந்து மட்டுமே விளையாட்டுக்கான கொம்புகளை எடுப்பது மரபாகும்.
- இம்மரத்தினை **கருவீரம், வெட்சி** என்றும் இலக்கியப் பெயரிலும் கூறுவர்.
- இம்மரத்தின் தலைப் பகுதி வேராகவும், உடற்பகுதி மரமாகவும் அமையும் வளை தடியாக எடுத்தே கொம்புகளைத் தயாரிப்பர்.
- வடசேரிக் கொம்புகள் தொண்ணூறு பாகைக்கு மேற்பட்ட வளைவுடையதாகவும் தென்சேரியாரது கொம்புகள் அதிலும் ஒடுங்கியதாயும் இருக்கவேண்டும் என்பது பொது விதி.
- இருவாரத்தாரது கொம்புகளின் வளைவிலுமுள்ள குச்சுக்கு அண்டிய பாதத்தின் சுற்றளவால் ஒத்த கொம்புகளே போட்டிக்காகத் தெரிந்தெடுக்கப்படுவன.
- அவை **‘பில்லி’** எனப்படும் இரண்டு குறுந்தடிகளுடன் இணைத்து முறுக்கேறிய புரிகளால் வரிந்து கட்டப்பட்டு **பனிச்சங்காய் பசை** பூசிக்காய வைக்கப்படும்.
- பின்னர் ஒருமரத்திற் பூட்டிய **‘அரிப்பு’** (சிறு வடம்) எனப்படுவதான கயிற்றில் தென்சேரியாரின் கொம்பு தொடுக்கப்படும். அக்கொம்பிற் கொழுவிய வடசேரிக் கொம்பிலே இன்னோர் அரிப்பினைப் பிணைத்து அவ்வரிப்பிலே பெரிய வடமொன்றினை மாட்டுவர். அவ்வடத்தினைப் பற்றிப்பலர் இழுப்பதற்குரியவகையில் வடத்தினை மாட்டுவர்.
- கொம்பின் முக்கிய உறுப்புக்களாக **‘பல்வாய்’** (கொம்பின் தலைப்பகுதி) **‘குச்சு’** (கொம்பின் வளைந்த இடத்தின் நடு ஆணி) **‘முதுகுமரம்’** (கொம்பின் தலைப்பு பகுதி) **‘பில்லி’** (கொம்பின் இருபுறமும் அணைத்துக்கட்டிய தடிகள்) என்பன காணப்படும் இழுக்கும்பொதும் இப்பகுதிகளைத் தாங்கிச் சிலர் பிடிக்கவே இழுப்பர்.



23. தென்சேரிக் கொம்பு
23(A) வடசேரிக் கொம்பு



23(B) பீலி(பில்லி)யுடன் வைத்துக்கட்டப்பட்டுள்ள கொம்பின் தோற்றம்



(2) மத்தளம் தயாரித்தல்



எமது பாரம்பரிய இசைக் கருவிகளில் ஒன்றாக 'மத்தளம்' காணப்படுகின்றது. இது தாள வாத்தியக் கருவியாகும். தமிழ் இசைமரபில் 'நான்முகன் மத்தளம்' என்று தெய்வீகத்துடன் கூறப்பட்டுள்ளது. நந்தீஸ்வரன் கையில் இருப்பதும் மத்தளம் என்றே கூறுவர். சிவனது நாட்டியத்திற்கு வாசிப்பதற்கென்றே இவ்வாத்தியம் உருவாகியது என்பது ஐதீகமாகும். மத்தள வாத்தியத்தின் வளர்ச்சியே 'மிருதங்க வாத்தியம்' என்று கூறுவர். எமது பாரம்பரிக் கூத்துக்களின் பிரதான தாளவாத்தியமாக இன்றும் மத்தளம் பயன்படுத்தப்படுகின்றது. மத்தளம் செய்யப்படும் முறையை நோக்கலாம்

- மத்தளமானது செய்வதற்கு பயன்படுத்தப்படும் கொட்டு (மரம்) **பலாமரம்** அல்லது **கொன்றை, பனை தென்னை பனைவேம்பு** போன்ற மரங்களும் பயன்படுகின்றது.
- மத்தளத்தின் அளவுக்கு ஏற்ப வெட்டப்படும் மரத்துண்டை உட்பகுதியாகக் குடைவர்
- அதன் இரண்டு முனைப்பகுதிகளும் ஒரே விட்டமாகவும் நடுப்பகுதி விட்டமானது சற்றுக் கூடுதலாகவும் இருக்குமாறு அதனைக் குடையவேண்டும்.
- பின்னர் ஆட்டுத்தோல் மாட்டுத்தோல் போன்றவற்றை பதப்படுத்தி நன்றாகக் காய்ந்த பின் ஒன்றின் மீது ஒன்றான இரண்டு தோல்களை (உட்புறம் ஆட்டுத்தோல் வெளிப்புறம் மாட்டுத் தோல் ) வலப்புறத்திற்கும் இடப்புறத்திற்கு வெவ்வேறாக எடுத்து அவற்றிற்கு 16 கண்கள் வெட்டுவர்
- வெட்டிய தோலை மரக்கொட்டுடன் இரு அந்தலைகளிலும் பொருத்தி கண்களுள் எருமைத் தோலால் உருவாக்கப்பட்ட 'வார்' இனைக் கொழுவி பிணைப்பர்.
- வாரினை இழுத்து ஏற்ற ஓசை வருமாறு கணித்து இறுக்குவர்.
- இரண்டு புறங்களிலும் 'கரணை' என்படுகின்ற சாதம் போடுகின்ற வழக்கமும் உண்டு இரண்டு புறமும் சாதம் போடுகின்ற மத்தளத்தினை 'சுத்த மத்தளம்' என்று அழைப்பர். மட்டக்களப்பு கூத்துக்களில் பயன்படுத்தப்படும் கூத்துக்களில் எல்லோரும் சாதம் போடுவதில்லை.

**பயிற்சி வினாக்கள்**

1. கொம்புமுறி விளையாட்டு நடத்தப்படும் இடம் யாது?
2. கொம்பு செய்வதற்குப்பயன்படுத்தப்படும் பிரதான மரம் யாது ?
3. கொம்பினை பதப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் பசையாது?
4. மத்தளம் எவ்வாறான இசையை பிரயோகிக்கின்றது ?
5. மத்தளம் செய்வதற்குப்பயன்படும் மரங்கள் எவை ?
6. இலங்கைக் கூத்துக்களிற்குப் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளை கண்டுபிடித்து எழுதுக?

## *இரண்டாம் தவணை*

## 01. வெகுஜன ஊடகங்களில் வெளிவரும் நாடகப்படைப்புக்கள் (1.6)

வெகுஜன ஊடகம் என்பது பெருந்தொகையான மக்களைச் சென்றடைகின்ற ஊடகம் என்பதாகும் அதாவது தொலைவு வேறுபாடின்றி ஒரே நேரத்தில் பல்லாயிரக் கணக்கான மக்களை சென்றடையக்கூடிய ஊடகங்கள். இவற்றை பின்வருமாறு பாகுபடுத்துவர்.

1. அச்சு ஊடகங்கங்கள்
2. மின்னியல் ஊடகங்கங்கள்
3. இலத்திரனியல் ஊடகங்கள்

இந்த ஊடகங்கள் எல்லாவற்றுக்கும் தாய் ஊடகம் என்று மேடை நாடகத்தினை குறிப்பிடலாம். கல்வி வளர்ச்சியடையாத காலத்தில் நாடகங்களே மக்களின் பிரதான ஊடகங்களாக இருந்தன. கல்வி தொழில் நுட்ப வளர்ச்சியின் பின்னரே பல்வேறு ஊடகங்கள் உருவாக்கம் பெற்றன. அத்தகைய ஊடகங்கள் வளர்ச்சி அடைந்தாலும் அவை எல்லாவற்றிலும் நாடகத்துறை தொடர்புபடுவதாகவே அமைகின்றது.

**அச்சு ஊடகங்கள்**

அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டதன் பின் உருவாகியவையே அச்சுவழி வெகுஜன ஊடகமாகும். அச்சு வழி ஊடகங்கள்

- எழுதி அச்சடிக்கப்பட்டவையாக இருக்கும்.
- வரிவடிவத்தில் அமைந்து இருக்கும்
- வாசிப்பதன் மூலமாக விளங்கிக்கொள்ளப்படுவது.
- சேமித்து வைக்கக்கூடியது.
- எவ்வேளையிலும் வாசிக்கப்படக்கூடியது.
- வாசிப்பு ஆற்றல் கற்பனையாற்றல் மேம்படுவதாக அமையும்

*அச்சு ஊடகங்களில்*

  - பத்திரிகை
  - சஞ்சிகை
  - நூல்கள்
  - இலக்கியங்கள்

போன்ற பலவற்றையும் குறிப்பிடலாம். இதில் நாடகத்தினைப் பொறுத்தவரையில் அது அச்சு ஊடகங்களுடன் ஆதி காலங்களிலிருந்தே தொடர்புபடுகின்றது.

- நாடகம் மேடையேற்றப்படுவதற்காக எழுதப்பட்டாலும் அச்சு வடிவம் பெறும் போதே அது இலக்கிய வடிவமாகின்றது.
- இலக்கியங்களிலொன்றாக நாடகமும் காணப்படுகின்றது.
- அச்சுவடிவத்தில் பல நாடகங்கள் உள்ளன.
- நாடகமும் அரங்கியலுக்குமான சஞ்சிகைகளும் உள்ளன. (உதாரணம் 'அரங்கம்' 'ஆற்றுகை' 'கட்டியம்' 'உடல்')
- நாடகம்பற்றிய விமர்சனம் புகைப்படம் விளம்பரம் என்பவையும் பத்திரிகைகளில் வெளிவருகின்றன.

**2.மின்னியல் ஊடகங்கள்**

மின்சாரம் கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னர் கண்டுபிடிக்கபட்ட ஊடகங்கள் மின்னியல் ஊடகங்கள் எனப்படுகின்றன. குறிப்பாக

  - வானொலி
  - சினிமா
  - தொலைக்காட்சி

போன்றவைகளைக் குறிப்பிடலாம்

**வானொலி**

வானொலி என்பது கேட்டலுக்குரிய தொடர்பூடகம். கம்பியில்லாது வானலைகளால் உலகம் முழுவதும் கேட்கக்கூடிய ஊடகமாகும். வானொலி கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னரே 'வானொலி நாடகம்' என்னும் ஒரு நாடக வகை உருவாகியது. வானொலி நாடகம் கேட்டலின் மூலம் உணரப்படும் நாடகமாகும்.

- பாத்திரங்களின் உரையாடல்கள் மூலமாகவே கதைசொல்லப்படும்
- கேட்கின்ற நேயர்கள் அதனை கற்பனையில் உணர்ந்து இரசிப்பார்கள்

- நடிகர்களின் குரல்வளமே இதன் அடிப்படை மூலகமாகும்
- உரையாடல்களைக்கூடாகவே அனைத்தும் சொல்லப்படும்.
- பின்னணியாக இசையும் பயன்படும்.
- இலங்கை வானொலிக்கென தமிழில் முதன்முதலில் நாடககங்களைத் தயாரித்தவர்' 'சானா' என அழைப்படும் சண்முகநாதன் ஆவார்.

**சினிமா/சலனப்படம்**

- சினிமா என்ற கலை வடிவமும் கமரா என்ற தொழில்நுட்பக்கருவி கண்டுபிடிக்கப்பட்தன் பின் உருவாகிய கலை வடிவமாகும்.
- மேடை நாடகங்களே ஆரம்பத்தில் திரைப்படங்களாக எடுக்கப்பட்டன.
- இதுவும் கமரா மூலமாக ஒளிப்பதிவு செய்யப்பட்டு செவ்விதாக்கம் (Edting) பெற்றதன் பின்னர் திரை அரங்குகளில் அளிக்கை செய்யப்படுவது.

இதற்கென பிரத்தியேகமான திரை அரங்கிற்குச் சென்றே இதனைப் பார்வையிடவேண்டும் .தொலைக்காட்சிகளில் பார்வையிடுவதுமுழுமையாகாது

**தொலைக்காட்சி**

கமரா என்ற தொழில்நுட்பமும் தொலைக்காட்சி என்ற தொழில் நுட்பமும் இணைந்ததே இந்த ஊடகமாகும். தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகளை கண்ணாலும் பார்க்க முடியும் காதாலும் கேட்க முடியும்.அசையும் கமரா ஒளிப்பதிவு செய்யும் யாவற்றையும் தொலைக்காட்சி ஒளிபரப்புச் செய்யும். இன்று பலரும் பயன்படுத்துகின்ற பொழுதுபோக்குச் சாதனம் இதுவாகும்.

**தொலைக்காட்சி நாடகங்கள்**

தொலைக்காட்சிக்கு என உருவாக்கப்பட்ட நாடகங்கள் தொலைக்காட்சி நாடகங்களாகும். இவை கமராவின் முன்பாக நடிக்கப்பட்டு ஒளிப்பதிவு செய்யப்பட்டு ஒளி,ஒலி செவ்வதாக்கத்திற்குப்பின் ஒளிபரப்பாகும்.

- குறுநாடகங்கள் (ஒரு அங்கத்தில் முடிவடைவது)
- நெடுந்தொடர் நாடகங்கள் (மெகாத் தொடர்)

தொலைக்காட்சி நாடகங்களை ஒரே நேரத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்வையிடுவர் தொலைக்காட்சி இருந்தால் எங்கிருந்தும் பார்க்க முடியும். சேமித்துவைக்கக் கூடியது.தவறுகள் திருத்தப்பட்டு செம்மைப்பாட்டோடு ஒளிபரப்பப்படுவது மட்டுமன்றி

- மேடை நாடக காட்சிகளும் ஒளிபரப்பப்படும்
- மேடை நாடகம் தொடர்பான ஆவணத் திரையாக்கங்கள் மேற்கொள்ளப்படும்
- நடிகர்கள் நாடக ஆசிரியர்களின் புகைப்படங்கள், நேர்காணல்கள் போன்றவையும் ஒளிபரப்பப்படும்

**செயற்பாடு**

மணவர்கள் பின்வரும் திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்வுகளைத் தேடி பார்வையிடலாம்.

- திரைப்படம் - பரதேசி, சாட்டை, வாகை சூடவா, இராட்சசி… போன்ற திரைப்படங்களை
- தொலைக் காட்சி நாடகம் - 7C, மகாபாரதம், இராமாயணம்….
- வானொலி நாடகம் - குதூகலம் (இலங்கை வானொலி நாடகங்கள் )

பார்த்த கேட்ட விடயங்களை வீட்டில் உள்ளவர்களுடன் கலந்துரையாடி அவைபற்றிய விமர்சனங் களைப் பெறவும்

- ❖ நவீன இலத்திரனியல் ஊடகங்களாக தற்போது கணணி, தொடுதிரை தொலைபேசிகள் இணையத்தளங்கள், சமூக வலைத்தளங்கள்... போன்ற பலவும் காணப்படுகின்றன அவையும் பல வகைகளில் நாடகக்கலையுடன் தொடர்புடன் காணப்படுகின்றன.

## 02. அரங்கின் துணைக்கலைகளின் பயன்பாடு (1.7)

அரங்கின் பிரதான மூலகங்களாகக் கொள்ளப்படுபவை

***நடிகன் - அரங்கவெளி - பார்ப்போர்***

இவற்றைவிட பல்வேறு துணைக் கலைகள் நாடகத்தில் பயன்படுத்தப்படுகின்றன.

- **வேடஉடை** – நடிகனைப்பாத்திரமாக மாற்றுகின்றது.
- **ஒப்பனை** – அது நடிகனைப் பாத்திரமாக பண்பு மாற்றம் செய்கின்றது
- **காட்சி விதானிப்பு** – காட்சிக்குரிய பௌதீக சூழலை ஏற்படுத்துகின்றது.
- **இசை** – உணர்வு வெளிப்பாட்டிற்கு உதவுகின்றது.
- **ஒளி** – காட்சியைத் தெரியச்செய்வதுடன் உணர்வு வெளிப்பாட்டிற்கு உதவுகின்றது.
- **ஒலி** – உரையாடல்கள், பாடல்களைப் பார்க்கச் செய்கின்றன.
- **மேடைப்பொருட்கள்** - சூழலுக்கு உதவுகின்றன.

நாடகமொன்றின் முழுமையில் இந்தத் துணைச் சாதனங்கள் அல்லது கலைகள், முக்கியத்துவம் பெறுகின்றன.

வெகுசன ஊடகங்களிலும் இந்தத் துணைக் கலை அம்சங்கள் தொடர்புபடுகின்றன.

**சினிமா**

- வேட உடை - நடிகர்களை பாத்திரமாக பண்பு மாற்றம் செய்வதற்கு வேட உடை, ஒப்பனை உதவுகின்றன.
- காட்சிவிதானிப்பு- இங்கு இயற்கையான அமைவிடங்களையும் சூழ்நிலைகளாகவும் அமைகின்றன.
- இசை - பாடல்கள், பின்னணி இசை என்பன உணர்ச்சியை வெளிப்படுத்தவும் கருவைக் காவிச் செல்லவும் உதவுகின்றன.
- ஒளி – சினிமா என்பதே ஒளிப்பதிவினூடகவே எடுக்கப்படுகின்றன. அதனால் கமரா இங்கு இன்றியமையாத கருவியாகின்றது. அதேவேளை காட்சிகளுக்குரிய ஒளியின் அளவுகளை ஒளிக் கருவி பிரதிபலிக்கின்றது.
- ஒலி – உரையாடல், பின்னணி இசை பாடல்கள் போன்றவைகள் அனைத்தும் காட்சியுடன் இணையத்தக்கதாக துல்லியமாக ஒலிப்பதிவு செய்யப்படுகின்றன.

**வானொலி நாடகம்**

- வேட உடை ஒப்பனை – வானொலி நாடகத்திற்கு அவசியமற்றவைகளாக உள்ளன.
- காட்சிவிதானிப்பும் அவசியமற்றது.
- உரையாடல்கள் மூலமாகவே வேட உடை ஒப்பனை காட்சிப்பின்புலம் ஆகியவை சொல்லப்படுவதில் இருந்து பாரப்போன் கற்பனை செய்கின்றான்.
- இசை இங்கு முக்கிய துணைச்சாதனமாக இருக்கின்றது. உணர்வினையும் காட்சிச்சூழலையும் இசை வெளிப்படுத்துகின்றது.
- ஒலி – ஒலியே வானொலி நாடகத்தின் பிரதான ஊடகமாகும். உரையாடல், ஒலிகள் இசை யாவும் ஒலியினூடாகவே கடத்தப்படுகின்றன.

**நடைமுறை வாழ்விலும் அரங்கிலும் துணைக் கலைகளின் பயன்பாடு.**

அரங்கின் துணைக்கலை அம்சங்களான வேட உடை, ஒப்பனை, காட்சிவிதானிப்பு, ஒளி. ஒலி, இசை,என அனைத்தும் நாளாந்த வாழ்விலும் இயல்பாகப் பயன்படுத்தப்படுகின்றன. அவை வாழ்வுடன்

இரண்டறக் கலந்தவையாக பயன்பாட்டுக்குரியவவையாக காணப்படுகின்றன. ஆனால் அரங்கில் அவை செயற்கையாக காட்சி பிரம்மையை ஏற்படுத்துவதற்காக உருவாக்கப்படுகின்றன.

***வேட உடை, ஒப்பனை***

- நாளாந்த வாழ்வில் உடைகள் மனிதனின் அடிப்படையான மானத்தினைக் காக்கின்ற ஒன்றாகப் பயன்படுகின்றது. எனினும் வீட்டிற்கு ஒன்றும் ,வெளியில் போகும் போது ஒன்றும், விசேட நிகழ்வுகளுக்கு ஒன்றும் வேலைக்குப் போகும்போது ஒன்றும் என பயன்படுகின்றது. ஆனால் ஒப்பனை பிரத்தியேகமாக செய்யப்படுவது குறைவு திருமணம் போன்ற விசேட வைபவங்களிலேயே ஒப்பனை செய்யப்படுகின்றது.
- ஆனால் நாடகத்தில் நடிகனைப் பாத்திரமாக்குவதற்கு வேட உடை ஒப்பனை இன்றியமையாததாக மேற்கொள்ளப்படுகின்றது. பாத்திரத்தின் பால் வயது சமூக அந்தஸ்து, காலம் குணஇயல்பகள் என்பவற்றுக்கு ஏற்ப திட்மிட்டுத் தயாரிக்கப்படுகின்றது.

***காட்சிவிதானிப்பு***

- அன்றாட வாழ்வில் நாம் வாழும் சூழலே காட்சியாகின்றது. அது உண்மையானதாகவும் இருக்கின்றது. வீடு என்றால் அதன் வாயில் வரவேற்பறை ..என ஒவ்வொன்றும் உண்மை யானதாக இருக்கும். கோவில், பாடசாலை, சந்தை, என ஒவ்வொன்றும் அதற்கான கட்டட அமைப்புக்களுடன் காணப்படும்
- ஆனால் நாடகத்தில் அவை அனைத்தும் பாரப்பவர்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் போலியானதாக செய்து வைக்கப்படுகின்றது. ஆனால் உண்மையான காட்சிகளே அங்கு மாயையாக பிரதிபலிக்கப்படுகின்றன.

***ஒளிவிதானிப்பு***

- சாதாரண வாழ்வில் சூரிய ஒளியே பகல் முழுவதற்கும் ஒளிவழங்குகின்றது இரவில் மின்குமிழ் அல்லது விளக்குகள் ஒளி வழங்குகின்றன. வாழ்வின் தேவைக்கு ஏற்ப ஒளியும் பயன்படுத்தப்படுகின்றது.
- ஆனால் நாடகத்தில் பிரத்தியேக ஒளி முதல்கள் திட்மிட்டுப் பயன்படுத்துப்படுகின்றன. வாழ்வில் இருப்பது போன்று அரங்கச் சூழல் பிரதி பலிக்கவேண்டும் என்பதற்காக கண்டுபிடிக்கப்பட்ட ஒளிமுதல்கள் அங்கு பயன்படுத்தப்படுகின்றன. பார்ப்பவர்கள் இருட்டிலே இருக்க அரங்கில் ஒளி பாய்ச்சப்படுகின்றது. அத்துடன் உணர்வுகளைப் பிரதி பலிப்பதற்கும் ஒளிபயன்படுத்தப்படுகின்றது. அது ஒரு கலையாக பயன்படுகின்றது.

***ஒலி, இசை***

- நாளாந்த வாழ்வில் ஒலிகள் இயல்பாக எழுபவையாக இயற்கையால் உருவாகுபவையாக காணப்படுகின்றன. வாகன இரைச்சல், இடியொலி, கோவில் மணி ஒலி, கடல் அலை ஓசை, மக்கள் உரையாடுகின்ற ஒலிகள், பறவைகள் விலங்குகளின் ஒலிகள்…. என பலவற்றினையும் குறிப்பிடலாம். அவ்வாறே இசையும் வழிபாடுகள் விசேட நிகழ்வுகளில் பயன்படுகின்றன.
- ஆனால் நாடகத்தில் அவை திட்டமிட்டு உருவாக்கப்படுகின்றன. அவை கலையாக படைக்கப் படுகின்றன. பாரப்பவர்கள் அதனை விளங்கும் வகையில் காட்சிகளை உருவாக்குவதற்காக செயற்கையாக உருவாக்கப்படுகின்றன.

**பயிற்சி வினாக்கள்**

1. அரங்கின் துணைச்சாதனங்கள் எவை?
2. வெகுஜன ஊடகங்களில் இன்று அதிகம் பயன்படுத்தப்படுகின்ற ஊடகம் யாது?
3. மின்னியல் ஊடகங்களில் உம்மைக் கவர்ந்த ஊடகம் யாது அதற்கான காரணத்தையும் எழுதுக?
4. அச்சுருப்பெற்ற நாடகப்பிரதிகள் நான்கின் பெயர் தருக?
5. திரைப்படங்களை திரை அரங்குகளில் பாரப்பதற்கும் தொலைக்காட்சியில் பாரப்பதற்குமான வேறுபாட்டினை விளக்குக?

## 03. அறிவியல் கதை புனைதல் (2.4)

கதைகளை கேட்பதற்கும் வாசிப்பதற்கும் எல்லோரும் விரும்புவார்கள். கதை என்பது சம்பவங்களை அடிப்படையாக வைத்து அவற்றினை ஒன்றுடன் ஒன்று இணைத்து இரசனைக்குரிய வகையில் தொடக்கம் - நடு – முடிவென ஒரு ஒழுங்கமைவில் ஆக்கப்படுவதாகும்.

கதைகள் கற்பனையாகவோ உண்மையாக நடந்தவையாகவோ அமையலாம்.கதைகளின் தன்மைக்கு ஏற்ப அவற்றை வகைப்படுத்துவதும் உண்டு.

- சிறுவர் கதைகள்
- கற்பனை கதைகள்
- நகைச்சுவை கதைகள்
- விஞ்ஞான கட்டுக்கதைகள்
- அறிவியல் கதைகள்

அறிவியல் கதைகள் என்பது விஞ்ஞானபூர்வமான உண்மைகள் அல்லது அறிவியல் சார்ந்த உண்மைகளை அடிப்படையாக வைத்து கற்பனையாகப் பின்னப்படுகின்ற கதைகளாகும். உதாரணமாக தமிழ் சினிமாவில் உருவாக்கபபட்ட ‘எந்திரன்’ 2.0 திரைப்படங்கள் அறிவியல் புனைகதை எனலாம்.

**செயற்பாடு**

- வெவ்வேறு கதை நூல்களைத் தேடி வாசியுங்கள்
- அறிவியல் புனைகதைகளையும் தேடி வாசியுங்கள் உ+ம் ‘நாட்டைக்காத்த குழிவாடி’
- வாசிப்பு அனுபவத்தினைக் கொண்டு கதை ஒன்றினை எழுதுங்கள்
- எழுதிய கதையினை வீட்டில் உள்ளவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள்
- வீட்டில் உள்ளவர்களின் கருத்துக்களையும் உள்வாங்கி அதனை செம்மையாக மீண்டும் எழுதுங்கள்
- நீங்கள் எழுதிய கதையை நாடகமாக்க வேண்டும் என்பதனை மறந்துவிடாதீர்கள்

## 04. அறிவியல் புனைவு சார்ந்த நாடகங்களை எழுதுதல் (2.5)

கதைகளை நாடகமாக்கும் பெறிமுறையை நாம் அலகு இரண்டில் நோக்கியுள்ளோம் அந்த அடிப்படையில் அறிவியல் புனைகதை ஒன்றினை நாடகமாக்கும் செயற்பாட்டினை மேற்கொள்ளுங்கள்.

- ❖ நீங்கள் எழுதிய அறிவியல் புனைகதையை இப்போது நாடகமாக்குவதற்கு முயற்சி செய்யுங்கள்.
- ❖ கதைக்கரு, பாத்திரங்கள்,முரண், சொல்லாடல்கள், காட்சிகள், வளர்ச்சிக் கட்டமைப்பு என நாடகம் அமையப்போகும் தன்மையை திட்டமிடுங்கள்
- ❖ அந்தக்கதையில் வரும் சம்பவங்கள் மோதுகை பாத்திரங்கள் என்பவற்றை நாடக வடிவத்திற்கு ஏற்ப மாற்றம் செய்ய வேண்டி ஏற்படலாம்.
- ❖ கதையில் வரும் அறிவியல் அம்சம் இங்கு மேலும் அழுத்தம் பெறவேண்டும் என்பதனை கவனத்திற்கொள்ளுங்கள்.
  - ○ கற்பனை
  - ○ புதுமை
  - ○ எதிர்பாராத திருப்பம்
  - ○ வியப்பு…. போன்ற அம்சங்கள் நாடகத்தில் விரவி இருத்தல் வேண்டும்.
- ❖ நீங்கள் எழுதும் நாடகத்தினை வைத்துக்கொண்டே பல செயற்பாடுகளை மேற்கொள்ளப் போகிறீர்கள் என்பதனை நினைவிற்கொள்ளுங்கள்
- ❖ போதுமான நேரம் ஒதுக்கி நாடகத்தினை எழுதுங்கள்
- ❖ எழுதிய நாடகத்தினை பேசிப்பாருங்கள்

- ❖ வீட்டில உள்ளவர்களுக்கு, அல்லது தொலைபேசி வாயிலாக உங்கள் நண்பர்கள் ஆசிரியர்களுக்கு வாசித்துக்காட்டுங்கள்
- ❖ பலரது கருத்துக்களையும் உள்வாங்கி நாடகத்தினை மீளவும் திருத்தி எழுதுங்கள்

## 05.காட்சி விதானிப்பினை திட்டமிடல் (2.6)

- காட்சி விதானிப்பு என்பது நாடக எழுத்துருவிலுள்ள காட்சி சூழலை கட்புலனாகும் வகையில் அரங்கில் உருவாக்குவதாகும்.
  நாடகத்தின் கரு மோடி காலம் களம் என்பவற்றை கருத்தில் கொண்டு காட்சியை உருவாக்க வேண்டும்.

- *காட்சிகளை நாடகங்களில் பின்வருமாறு உருவாக்குவர்*

  - வரையப்பட்ட காட்சித் திரைகள்
  - மாதிரி உருக்கள்
  - உண்மையான பொருட்கள்

- போன்றவற்றை பயன்படுத்தி உருவாக்குவார்கள்.
- காட்சி விதானிப்பினை அடிப்படையில் இரண்டு வகைப்படுத்துவர்
  - ✓ யதார்த்த காட்சி விதானிப்பு
  - ✓ யதார்த்தமற்ற காட்சி விதானிப்பு
- யதார்த்த காட்சி விதானிப்பானது வாழ்க்கையில் காணப்படுவது போல உண்மையைப் போன்று அமைக்கப்படும் காட்சி விதானிப்பு.
- யதார்த்தமற்றது என்பது கற்பனையும், குறியீடு போன்றவற்றையும் கொண்டு மிகையாக ஆக்கப்படுபவை.

எனவே நீங்கள் முதற் பாடத்தில் எழுதிய அறிவியற் புனைவு நாடகத்திற்கான காட்சி விதானிப்பினை திட்டமிடுங்களை. இங்கு திட்டமிடுவது என்பது நீங்கள் விரும்புகின்ற காட்சியை படமாக வரைவது ஆகும். திட்டமிட்டுபடமாக வரைந்த காட்சியை நாடகங்களில் பின்னர் உண்மையாக உருவாக்குவார்கள். எனவே அறிவியல் புனைவு நாடகத்திற்கான காட்சி விதானிப்பாக இருப்பினும் பின்வரும் விடயங்களை கவனத்திற்கொள்ள வேண்டும்.

- ▪ எழுத்துருவின் மையப்பொருள்
- ▪ கதை
- ▪ கதை காலம்
- ▪ மோடி
- ▪ கதைக்களம்
- ▪ காட்சி மாற்றம்
- ▪ வர்ணம்
- ▪ காட்சியின் தொனி
- ▪ மனநிலை

என்பவற்றை விளக்கி திட்டமிட வேண்டும். பின்னர் அவற்றை உருவாக்க தேவையான மூலப் பெருட்களை திட்டமிட வேண்டும். அத்துடன் அறியல் புனைவுசார் நாடக காட்சி விதானிப்பானது பெரும்பாலும் யதார்த்தமற்ற வடிவமாகவே காணப்படும்.

- ✓ யதார்த்த விரோத பாங்கானது
- ✓ மிகைப்படுதப்பட்டதாக
- ✓ கற்பனை பண்பை அதிகம் கொண்டதாக
- ✓ வியக்கத்தக்கதாக
- ✓ வினோத பண்பு கொண்டதாக அமையலாம்

**செயற்பாடு**

- எழுத்துருவை நன்கு வாசியுங்கள்
- காட்சிகளைப் பிரித்துக்கொள்ளுங்கள்
- காட்சிவிதானிப்பு சார்ந்த அம்சங்களை நாடகத்தில் கண்டறியுங்கள்
- காட்சிகளைத் திட்டமிடுங்கள்
- அதனை ஒவ்வொரு காட்சியாக படமாக வரையுங்கள்
- தேவையான மூலகங்களைப் பட்டியலிடுங்கள்.
- திட்டமிடப்பட்ட விடயங்களை கோவை ஒன்றிலே பேணுங்கள்

## 06. அரங்க கைப்பொருட்களைத் தயாரித்தல் (2.7)

- கைப்பெருட்கள் என்பது நாடகத்தில் நடிகன் உபயோகம் செய்கின்ற பொருட்களாகும்.
- *உதாரணமாக-* வாள், கத்தி, புத்தகம், கோப்பை, வானொலி,…
- நாடகத்தில் கைப்பொருட்களும் கதை சொல்லும் என்பார்கள்.
- நடிகனின் நடிப்பிற்கு இப்பொருட்கள் அதிகம் பயன்படுத்தப்படும்.
- அரங்கக் கைப்பெருட்களானவை
  - நடிகனால் கையாளத்தக்க வகையில் எளிமையானதாக அமைய வேண்டும்.
  - நடிகனின் நடிப்பிற்கு துணை புரிவதாக இருக்க வேண்டும்.
  - நாடக வகைக்கு ஏற்ப அமைந்திருக்கவேண்டும்
  - உண்மையான பொருளைப் போன்ற அமைப்பை கொண்டிருக்க வேண்டும்.

அறிவியல் புனைமம் சார்ந்த நாடகத்தில் வருகின்ற கைப்பொருட்கள்

- ✓ யதார்த்த நாடகப்பொருட்கள் போல் அல்லாது மிகைப்படுத்தப்பட்டதாக அமையலாம்.
- ✓ அதிக கற்பனைப்பண்பு கலந்திருக்கலாம்.
- ✓ விசித்திரமான வினோதமான தோற்றப்பாட்டை கொண்டிருக்கலாம்
- ✓ வடிவம்,அளவு அடிப்படையில் புதுமையும் உருப்பெருக்கமும் கொண்டிருக்கலாம்

எனவே மாணவர்களாகிய நீங்கள் எழுதிய நாடகத்திற்குரிய கைப்பொருட்களை உருவாக்குங்கள்.

- ❖ கழிவுப்பெருட்களிலிருந்தும்
- ❖ காட்போட்
- ❖ பலகைகள் போன்றவற்றை பயன்படுத்தியும் உருவாக்கமுடியும்

**செயற்பாடு**

நீங்கள் உருவாக்கிய நாடகத்திற்குத் தேவைப்படும் முக்கிய பொருட்கள் சிலவற்றை உருவாக்குங்கள்

## 07. அரங்கப்பயிற்சிகள் (3.4)

நடிகனை தயார்ப்படுத்துவதற்காக அரங்கிலே பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. நடிகருக்கான பயிற்சிகளை பின்வரும் மூன்று வகையாக குறிப்பிடுவர்.

1. உடலுக்கான பயிற்சிகள்
2. குரலுக்கான பயிற்சிகள்
3. மனதிற்கான பயிற்சிகள்

நடிகன் தனது நடிப்புச்செயற்பாட்டிற்கு பயன்படுத்துகின்ற பிரதான மூலகம் அவனது உடலாகும். அதனாலேயே உடலுக்கான பயிற்சிகள் முக்கியத்துவம் வகிக்கின்றன. பின்வரும் வகையில் உடல் பயிற்சிகளை செய்து கொள்ளுங்கள்.

- ❖ காற்றோட்டமான ஒரு இடத்தில் நில்லுங்கள்
- ❖ உடலை இறுக்கமின்றி தளர் நிலையில் வைத்துக் கொள்ளுங்கள்
- ❖ உடலின் ஒவ்வொரு பொருத்துக்களையும் சங்கிலித் தொடராக குறிப்பிட்ட நேரத்திற்கு அசையுங்கள்
- ❖ கைவிரல்கள்.....மணிக்கட்டுக்கள்…..முழங்கைகள்….தோள்மூட்டுக்கள்……கழுத்து….இடுப்பு…..கால்பொருத்துக்கள்….முழங்கால்கள்…..பாதங்கள்….கால்விரல்கள்
- என சங்கிலித்தொடராக அசையுங்கள்
- ❖ குறிப்பிட்ட இலக்கத்தொடருக்கு அமையவோ அல்லது ஒரு இசைப்பிரயோகத்திற்கு அமையவோ இதனை செய்யலாம்.
- ❖ தொடர்ந்து இசைக்கு ஏற்ற வேகமாகவும் தளர்வாகவும் அசையுங்கள்.
- ❖ குறிப்பிட்ட உணர்வுகளுடன் அசையுங்கள்
- ❖ நன்கு உடல் வியர்க்கும் வரை இப்பயிற்சியை செய்யுங்கள்

உடலை தளரச்செய்வதற்கான மேற்படி பயிற்சியானது நடிகனுக்கு பலவகைகளில் உதவும்.

- ➢ உடல் இலகுவாக இருக்கும்
- ➢ தனது ஆற்றலை நடிகன் அறிந்து கொள்ள உதவும்
- ➢ அசைவுகளை விரைவாக நீண்ட நேரம் செய்யத்தூண்டும்
- ➢ உற்சாகம் ஏற்படும்
- ➢ அசைவுகளை அழகுடன் வெளிப்படுத்த முடியும்.
- ➢ பதட்டம் கூச்சமின்றி செயல்களை செய்ய முடியும்.
- ➢ உடலை எமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும்.

## 08. உடல் குரலுக்கான ஒத்திசைவு பயிற்சிகள். (3.5)

- நடிகனின் பிரதான மூலகங்களாக அவனது உடல் மட்டுமன்றி குரலும் காணப்படுகின்றது.
- உடலும் குரலும் ஒத்திசைவுடன் இயங்கும் போதே நடிப்பினை முழுமையாக பயன்படுத்த முடியும்.
  - ➢ முதல் பாடத்தில் மேற்கொண்ட உடல் தளர்வுப் பயிற்சியினை சங்கிலி தெடராக செய்யுங்கள்.
  - ➢ தொடர்ந்து சுவாசப் பயிற்சியினை மேற்கொள்ளுங்கள்.
  - ➢ சுவாசத்தை உள்ளெடுத்து வெளியேற்றும் போது 'ஓம்' என்ற ஓசையுடன் வெளிவிடுங்கள்.
  - ➢ தொடர்ந்து உடல் அசைவுகளுடன் பின்வரும் சொற்களைச் சொல்லிப்பாருங்கள்.

*''அம்மா பசிக்கிறது''*

*''ஐயோ எனது பணப் பையை காணவில்லை''*

*'' நல்ல இதமான குளிராக இருக்கிறது''*

*''ஐயோ நாய் கலைக்குது……நாயைப்பிடியுங்கோ'*

- ➢ அசைவுகள் செயல்களுடன் சொற்களையும் உச்சரியுங்கள்.
- ➢ உணர்வுடன் சொற்களை பேசுங்கள்.

-உடலும் குரலும் இணைந்து செய்யப்படும் பயிற்சிகளால்..

- செயலையும் வார்த்தையையும் பொருத்தமாக இணைக்க முடியும்.
- களைப்பின்றி நீண்ட நேரம் பேச முடியும்.
- உணர்வுகளுடன் பேச முடியும்.
- பாத்திரங்களை முழுமையாக படைக்க உதவும்.

**பயிற்சி வினாக்கள்**

1.உடற்பயிற்சியின் நன்மைகள் நான்கு தருக?
2.குரலை வேறுபடுத்தும் உடல் பகுதிகள் எவை?
3.குரல் பயிற்சியாக அமையவல்ல அரங்க விளையாட்டு ஒன்று தருக?
4.சாதாரண நடைமுறை வாழ்வில் உடல் குரல் மனம் என்பன ஒத்திசைவாய் நிற்கும் சந்தர்ப்பம் ஒன்றினைக் குறிப்பிடுக ?
5.உடல் குரல் மனம் என்பவற்றை ஒருங்கிணைக்கக் கூடிய பயிற்சி ஒன்று தருக?

## 09. ஆடுதல் பாடுதல் வழியாக பாத்திரங்களை சித்திரித்தல். (3.6)

- தமிழர்களின் மரபுவழி நாடகமாக காணப்படுவது கூத்து ஆகும்.இதனை நாட்டுக்கூத்து என்றும் அழைப்பர்.
- இலங்கையின் பல பிரதேசங்களிலும் பல்வேறு கூத்துக்கள் காணப்படுகின்றன.
- கூத்துக்களை வடமோடி, தென்மோடி… என பலவகைகளாக பாகுபடுத்துவர்.
- கூத்துக்கள்,ஆடுதல் பாடுதல் வழியாக கதை சொல்லுகின்ற கலை வடிவமாகும்.
- இங்கு பாத்திரங்கள் ஆடிப்பாடியே நடிப்பார்கள்.
- பாடல்களை பாடும் போது குழுவினர்கள் பிற்பாட்டுப் பாடுவார்கள். பாடல்களையும் ஆடல்களையும் ஒழுங்குபடுத்துவதாக **சல்லரி** அல்லது தாளம் காணப்படும்.
- மத்தளம்,உடுக்கு,மிருதங்கம் போன்ற இசைக்கருவிகள் கூத்துக்களில் பயன்படுத்தப்படும்

**பாத்திர வரவுகள்**

- கூத்துக்கள் கதை சொல்லும் கலை வடிவமாக இருந்தாலும், எடுத்துரைக்கும் பண்புடையது.
- இங்கு பாத்திரங்கள் மேடையில் தோன்றும் போது அவர்களுக்குரிய ஆடல்கள், பாடல்கள் காணப்படும்.
- பாத்திரங்கள் தம்மைத்தாமே அறிமுகம் செய்வர்கள். ‘தன்மையிலோ’, ‘படர்க்கையிலோ’ அவை அமையலாம்.

***தங்களது பயிற்சியாக பின்வரும் மூன்று பாடல்கள் தரப்பட்டுள்ளன. அவற்றின் பாடல்மெட்டுக்களை ஆசிரியர்களிடம் கேட்டு பாடல்களை உரிய மெட்டில் பாடிப்பழகுங்கள்.***

**நாடகப் பாடல்கள்**

(1) நாடகம்: ஞானசௌந்தரி (யாழ்ப்பாண தென்மோடி)
**(சேவகர்களின் வரவுப்பாடல்)**

சூரர்வீரர் நாமையா- வெற்றிமிகும்
சூரர்வீரர் நாமையா

1ம்சேவகன்:-

சூரர்வீரர் நாமே சூழும்புவியில்தானே
ஆரும் எதிர்க்க வந்தால் அஞ்சிப் பயந்து ஓடி
ஊரும்பேரும் சொல்லாதொண்டி ஒழித்துப்பின்பு
உற்ற மனையாளோடு கெட்டித்தனங்கள் பேசும் சூரர்வீரர்..

2ம்சேவகன்

தண்டு தடிகள் பொல்லுக் கொண்டுவருதல் கண்டால்
பெண்டில் தனக்குப்பின்னால் அண்டிமறைந்து நின்று
ஒண்டி ஒழித்துப் பார்த்து ஓட்டமெடுத்து வந்து
சுண்டு விரலைக்காட்டி சூரத்தனங்கள் பேசும் சூரர்வீரர்….

1ம்சேவகன்

செத்தபாம்பைக்கண்டுமிக்க மகிழ்ச்சிகொண்டு
மெத்தப்பெரியபொல்லால் மேனிஅடித்துநின்று
புத்தியாக வாலில் பிடித்து இழுத்து வந்து
வித்தைகாட்டி நிற்கும் வீரத்தனமுடைய சூரர்வீரர்……

2ம்சேவகன்

கொட்டில்தனிலே சென்று குடமாய்க்குடித்துப்போட்டு
சட்டிபானையோடு சண்டைநிதமும் செய்து
கெட்டித்தனங்கள் காட்டும் மட்டிமடையர் நாங்கள்
குதமும்வந்தாலே குடலும் சுருங்கிப்போன சூரர்வீரர்……

**(காவலூர் கவிஞர் ஞா.மா.செல்வராசா)**

(2) நாடகம்- காத்தவராஜன் (சிந்துநடை)

**(காத்தவராஜன் வரவு)**

ஆதிசிவன் மைந்தனல்லோ –நானும்
ஆதிக்காத்தான் ஓடிவாறேன் சபையோரே
ஐயா பெரியோரே

சோதிநிலா நின்றுதிக்க-இப்போ
துணைசெய்வார் ஆதிசிவன் மைந்தனெனக்கு
இப்போ பாலன் எனக்கு

பாலன்வந்தேன் சபைதனிலே - இங்கு
வந்திருக்கும் அனைவர்க்கும் வணக்கம் செய்தேன்
பாலன் வணக்கம் செய்தேன்

கும்பிட்டுத் தெண்டனிட்டேன் -இப்போ
கோடி நமஸ்காரம் செய்தேன் சபையோரே
ஐயா பெரியோரே

(3) நாடகம்-இராவணேசன் (வடமோடி)

**( இந்திரஜித்தன் வரவு)**

தந்த தகிர்த தகிர்த தாம்
திந்த திகிர்த திகிர்த தெய்
வீராதி வீர சூரன் மிக்கராவணன் தன்பாலன்
ஏராதிலங்கும்வீரன் இந்திரஜித்தன் வருகிறான்

விண்ணுயரந்த கொடிபறக்கவீரர்கோடி கோடிசூழ
மண்டலம் புகழும் மகாராஜன் மகன் வருகிறார
.

அண்டரும் பூமாலை பெய்ய ஆதிசேனன் தோள்நெளியத்

தண்டெடுத்து வில்லெடுத்து இந்திரஜித்தன் வருகிறார்

(பேராசிரியர் சி.மௌனகுரு)

**தாளப் பிரயோகம்**

- கூத்துக்களின் ஆடல் பாடல்களை அடிப்படையாக கொண்டு காணப்படுவதால் இங்கு "தாளம்"அடிப்படையானதாகும்.
- தாளம் என்பது நகரும் அசைவின் காலப்பிரமாணமாகும்.
- இது பாடல்களின் மெட்டுக்களுக்கு ஏற்ப வேறுபடும்.
- சங்கீத மரபிலே ஆதிதாளம், ரூபகதாளம்,அடதாளம் மிஸ்ரசாப்பு தாளம் என்ற பெயர்களில் தாளங்களை நுணுக்கமாக பிரயோகிப்பர்.
- கூத்துக்களில் அதனை 'தட்டுத்தாளம்' 'ஒற்றைத்தாளம்' 'இரட்டைத்தாளம்', 'கிலுக்குத்தாளம்' என்ற பெயர்களில் பிரதேசரீதியாக அழைப்பர்.
- எனவே நீங்கள் பயின்ற பாடலுக்கு அமைய கைகளினால் தாளம் போடுங்கள். 'ஒரு தட்டு' அல்லது 'இரண்டு தட்டு' என காலப்பிரமாணம் அமையும். அதனை கண்டுபிடித்து போட்டுப்பயிலுங்கள்.

**பயிற்சி வினாக்கள்.**

1. தமிழர்களின் மரபுவழி நாடகங்கங்கள் எப்பெயரில் அழைக்கப்படுகின்றன?
2. எடுத்துரைக்கும் பண்பு என்றால் என்ன?
3. கூத்துக்களில் பயன்படுத்தப்படும் மூன்று இசைக்கருவிகளின் பெயர்தருக?
4. மேலே உள்ள பாடல்களில் படர்க்கையில் அமைந்த வரவுத்தரு எது?
5. வீரர்களின பாடலில் வெளிப்படும் அவர்களின் பண்புகள் யாவை?

## *மூன்றாம் தவணை*

### 01.சிறுவர் நாடகத்தில் நால்வகைச் சித்திரிப்புக்கள் (1.8)

உடலையும் குரலையும் தூரிகைகளாகக் கொண்டு குறித்ததொரு வெளியில் வரையப்பெறும் ஓவியமே நாடகம் ஆகும். அது மனிதனைச் செய்கை நிலையில் வைத்துச் சித்திரிப்பது. இச்செய்கை நிலைச் சித்திரிப்புக்கு **நால்வகைச் சித்திரிப்பு** முறைகளே ஆதார சுருதியாக விளங்குகின்றன. நாடகம் நடிகனை முதன்மையாகக் கொண்ட கலை ஆதலால் நடிகன் தன் உடலையும் குரலையும் உணர்ச்சிகளையும் முனைப்புறுத்திச் சித்திரிக்கின்றான். நாடகம் ஒரு கட்புலக்கலை என்பதனால் நாடகத்தின் காண்பிய வெளிப்பாட்டின் மூலவராகவும் நடிகனே விளங்குகின்றான்.

நால்வகைச்சித்திரப்புக்களும் வருமாறு

1. உடல்வழிச்சித்திரிப்பு
2. குரல் /சொல்வழிச்சித்திரிப்பு
3. உணர்ச்சிவழிச்சித்திரிப்பு
4. காண்பியவழிச்சித்திரிப்பு

இந் நால்வகைச் சித்திரிப்புக்களும் நாடகங்களுக்கு அடிப்படையாக இருப்பதுபோல் சிறுவர் நாடகங்களுக்கும் அடிப்படையாகவுள்ளன.

**உடல்வழிச் சித்திரிப்பு** – உடலால் அசைவுகளால் சைகைகளால் ஆடலால் வெளிப்படுத்தப்படுவது.. சிறுவர் நாடகங்களில் பிராணிகளின் புறவாரியான நடத்தைகளை சிறுவர்கள் சித்திரிப்பதுடன், பல்வகை ஆடல்கள் அசைவுகள் விளையாட்டுக்கள் போன்றவற்றையும் நிகழ்த்துகின்றனர்.

**குரல்வழிச் சித்திரிப்பு** – நடிகனின் குரலால் உரையாடல், பாடல், ஒலிகள், எழுப்பி கருத்தினை வெளிப்படுத்துவது. சிறுவர் நாடகங்களில் எளிமையான சொல்லாடல்கள், பாடல்கள்,சிரிப்புக்கள் பிராணிகளைப்போல ஒலி எழுப்புதல்களௌன குரல்வழியாக கருத்தினை வெளிப்படுத்துகின்றனர்

**காண்பிய வழிச்சித்திரிப்பு** – நடிகன் அணியும் ஆடைகள் , அணிகலன்கள் ,ஒப்பனை,காட்சிவிதானிப்பு மூலமாகக் கருத்தினை வெளிப்படுத்துவது. சிறுவர்நாடகங்களில் இச்சித்திரிப்பானது அதிக முக்கியத்துவமுடையது சிறுவர்விரும்பும் கண்கவர் ஆடைகள் கவர்ச்சிகரமான காட்சிகள், வினோதம் தெரியும் ஒப்பனைகள், காடு மரங்கள் பூக்கள் என அவர்களைக் கவரும் காட்சி சூழல்கள் போன்றவற்றால் சிறுவர் நாடகம் நிரம்பிக்காணப்படும்.

**உணர்ச்சி வழிச்சித்திரிப்பு** – நடிகனின் முகபாவங்கள்,உணர்வுகளால் வெளிப்படுத்தப்படுவது. சிறுவர் நாடகங்களில் அதிக உணர்ச்சிக்கு இடமில்லாது விடினும் சிறுவர்களுக்குரிய மகிழ்ச்சி வெளிப்பாடும், தந்திரம் மிக்க நரி, கோபம் மிக்க சிங்கம், துன்புறும் எலி, என பல்வேறு உணர்வுகளை பிராணிப் பாத்திரங்களுக்கூடாகச் சிறுவர்கள் சித்திரிப்பார்கள்.

இத்தகைய நால்வகைச் சித்திரிப்புக்களும் இணையும் போது சிறுவர் நாடகம் கவர்ச்சிமிக்கதாக மாறுகின்றது சிறுவர்களின் கற்பனையை வியாபிக்கச்செய்கின்றது அவர்களிடத்தில் ஓர் உளவியல் திருப்தியை ஏற்படச்செய்கின்றது.

## 02. சத்தங்கள் ஒலிவிளைவுகள் (2.8)

- நாடகமானது பார்த்தலுக்கும் கேட்டலுக்குமான கலைவடிவமாகும்.
- பார்க்கின்ற விடயங்களுக்கு கேட்கின்ற விடயங்கள் முழுமை சேர்ப்பவையாக இருக்கும்.
- நாடகங்களில் பின்வரும் விடயங்கள் கேட்டலுக்குரியவையாகக் காணப்படும்
    - உரையாடல்கள்
    - இசை
    - ஒலி,சத்தவிளைவுகள்
- நாடகத்தில் பல்வேறு சத்தங்களும் ஒலிவிளைவுகளும் பயன்படுத்தப்படுகின்றன.
    - கடல் அலையின் ஓசை
    - இடிமின்னல் ஒலி
    - வாகனங்களின் இரைச்சல்
    - கோவில் மணியின் ஓசை
    - குதிரைகளின் குளம்பொலி
- பலசந்தர்ப்பங்களில் வெறும் ஒலியே நாடகத்தின் பேசு பொருளாக இருப்பதுண்டு.
  *உதாரணமாக* :- தபால்காரன் மேடைக்கு வராமலே அவனது 'சயிக்கிள் பெல் சத்தம்'தபாலின் வருகையை வெளிப்படுத்தும்.
- நாடகத்தின் செயல்கள் ஒலியினால் முழுமை பெறுவனவாகக் காணப்படும்.
  உதாரணமாக:- நிலம் உழுவதுபோல் அபிநயம் செய்யும்போது மாட்டின் சலங்கை ஒலி அந்தச்செயலுக்கு முழுமை சேர்க்கும்.

**செயற்பாடு**

- நீங்கள் உருவாக்கியுள்ள அறிவியல் நாடக எழுத்துருவுக்கான ஒலி இசை என்பவற்றை திட்டமிடுங்கள்
- அந்த ஒலிவிளைவுகளை எவ்வாறு காட்டப் போகிறீர்கள் என்பதனை விபரியுங்கள்
- நீங்கள் தெரிந்தெடுக்கும் இசைக்கருவிகள் எவை என்பதனையும் விபரியங்கள்

## 03. அரங்க அசைவியக்க வடிவாக்கம் ( Choreography ) (2.9)

- அசைவுகளின் தொகுதியே நாடகம் என்பார்கள்.
- நாடகத்தில் அசைவுகள் திட்மிடப்பட்டு அழகியல் பூர்வமானதாக ஒழுங்குபடுத்தப்படுகின்றன.
- யாதார்த்தப் பண்புள்ள நாடகங்களில் அசைவுகளானது மிகவும் இயல்பான அசைவுகளாகக் காணப்படும். ஆனால் மோடியுற்ற நாடகங்களில் அசைவுகள் கற்பனைக்கு ஏற்ப பல்வேறுவிதமாக பயன்படுத்தப்படும்.
- அசைவுகளை 'தனி அசைவு' 'கூட்டு அசைவு' என இரண்டாக நோக்கலாம். தனி ஒரு நடிகன் மேற்கொள்ளுகின்ற அசைவுகள் தனி அசைவுகளாகவும் ஒன்றிற்கு மேற்பட்ட நடிகர்கள்

மேற்கொள்ளுகின்ற அசைவுகள் கூட்டசைவுகளாகவும் கொள்ளப்படும்.

*எடுத்துக்காட்டாக* தனிஒருவர் தோணிவலிப்பது போல அபிநயிப்பது தனி அசைவு பலர் சேர்ந்து ஒன்றாக படகு வலிப்பது போல அபிநயம் செய்தல் கூட்டு அசைவு.

- நடனங்களும் அசைவுகளே ஆனால் நடனமானது வரன் முறைகளுடன் சாஸ்திரியபூர்வமாக நன்கு வடிமைக்கப்பட்டிருப்பது. அதிக கற்பனையை உட்புகுத்த முடியாதவை. நாடகங்களில் அத்தகைய அசைவுகளும் பயன்படுத்தப்படுகின்றன.
- அசைவுகளுக்கு அடிப்படையாக பின்வரும் இரண்டு விடயங்களும் காணப்படும்
    - ஒத்திசைவு
    - லயம்
- ஒத்திசைவு என்பது அசைவுகளின் ஒத்த தன்மையாகும். அந்த ஒத்த தன்மைகளுக்கிடையே ஒரு சமனான காலப் பெறுமானம் இருக்கும் அதனையே லயம் என்பார்கள். உதாரணமாக நாடகங்களில் பயன்படக்கூடிய ஒரு சில அசைவுக் கோலங்கள் தரப்படுகின்றன.
- (இவற்றினை நீங்கள் செய்து பாருங்கள் )
    - மரங்கள் காற்றுக்கு ஆடி அசைதல்
    - சீராக மழை பெய்து கொண்டிருத்தல்
    - பல பெட்டிகளைக் கொண்ட புகையிரதத்தின் நகர்வு
    - பலர் இணைந்து கரை வலை இழுத்தல்
    - பல பறவைகள் வானத்தில் பறப்பது
    - குதிரையில் போர் வீரர்கள் ஓடிச்செல்வது

**அசைவுகளை மேற்கொள்ளும் போது கவனிக்கவேண்டியவை**

- அசைவுகளின் இயல்பு
- அவற்றின் லயபூர்வமான தொடர்பு
- வெளியில் அவை செலுத்துகின்ற தாக்கங்கள்
- ஒருங்கிசைந்துவரும்போது ஏற்படும் பெருங்காட்சிப்பண்பு.
- நம்பும்படியான அசைவின் கோலங்கள்
- அசைவுகளின் திசை
- அசைவுகளுக்கான காலம்

**செயற்பாடு**

நீங்கள் உருவாக்கிய அறிவியல் புனைவு சார்ந்த நாடகத்திற்கான அசைவியக்கங்களை திட்டமிடுங்கள். அதற்கான இசைக்கோலங்களையும் தெரிவுசெய்யுங்கள். உதாரணமாக

- வேற்றுக்கிரகவாசிகளின் வினோதத் தன்மையான அசைவுகள்
- ரோபோக்களின் ஒருங்கிணைந்த அசைவுகள்
- கற்பனையான உருவங்களின் அசைவுகள்

## 04. வேட உடைகளை வடிவமைத்தல் (2.10)

- அரங்கின் முக்கியமான துணைக் கலைகளில் ஒன்றாக வேட உடை காணப்படுகின்றது.
- வேட உடை நடிகனை கதாபாத்திரமாக பண்புமாற்றம் செய்கின்றது.
- ஆள்பாதி ஆடைபாதி என்பது பழமொழி
- நடிகன் பார்ப்போர் முன்னிலையில் தன்னை பாத்திரமாக பௌதீக நிலையில் இனங்காட்டிக்கொள்வது வேட உடையினாலேயே ஆகும்.
- வேட உடை பாத்திரத்திற்குப் பாத்திரம் வேறுபடும். **உதாரணமாக**

    ஒரு வரலாற்று நாடகத்தில் **அரசன்** பாத்திரத்திற்கும் **புலவன்** பாத்திரத்திற்கும் ஒரே வகையான உடை காணப்படுவதில்லை.

    ஒரு சமூக நாடகத்தில் ஒரு **செல்வந்தர்** அணியும் ஆடையும் **ஏழைவிவசாயி** அணியும் ஆடையும் வேறுபடும்
- யதார்த்த நாடகங்களுக்கு ஒருவகை வேட உடைகளும், யதார்த்தம் சாராத நாடகங்களுக்கு வேறு வகையிலும் வேட உடைகள் அமையலாம். **உதாரணமாக**

சமூகக்கதைகளை கொண்ட **தாய், தந்தை, பாடசாலை மாணவர், தபால் காரன், விவசாயி…** போன்ற பாத்திரங்கள் யதார்த்தப் பண்பில் அமையும்

சிறுவர் நாடகத்தில் வரும் **பறவைகள், விலங்குகள்,**போன்ற பாத்திரங்கள், கூத்துக்களில் வரும் **அரசன்** போன்ற பாத்திரங்கள் கற்னையான நாடகங்களில் வரும் **ஸ்பைடர்மான்** போன்ற பாத்திரங்கள் எல்லாம் யதார்த்தம் சாராத பண்பில் அமையும்

- வேட உடைகள் பாத்திரத்தின் ***வயது, பால், சமூக அந்தஸ்து*** என்பவற்றுக்கு ஏற்பவும் வேறுபடும்.
- விஞ்ஞான அறிவியல் கற்பனையான நாடகங்களில் வேட உடையானது பெரும்பாலும் கற்பனை சார்ந்த உடைகளாகவே அமையும். *விசித்திரம், வினோதம், அழகு, கவர்ச்சி* என வியக்கவைக்கும் ஆடைகளை அணிவது பொருத்தமானது என்பர்.
- வேட உடைகளைத் திட்டமிடும் போது பாத்திரங்களுக்கு ஏற்றவாறு பொருத்தமான வர்ணங்களைப் பயன்படுத்தலாம்.

**செயற்பாடு**

- நீங்கள் உருவாக்கிய அறிவியல் புனைகதை சார்ந்த நாடகத்தில் வரும் பாத்திரங்களுக்கான வேட உடைகளை வடிவமைப்புச் செய்யுங்கள்.
- ஏன் இவ்வாறு வேட உடை அமைக்கின்றீர்கள் என்பதனை எழுதுங்கள்.
- உத்தேசிக்கும் வேட உடைகளை வெள்ளைத் தாள் ஒன்றில் வரைந்து வர்ணம் தீட்டுங்கள்.
- உங்களிடம் கிடைக்ககூடிய துணிகள் உடைகளை கொண்டு அதில் ஒரு பாத்திரத்திரக்கான வேடஉடையை வீட்டிலே செய்து பாருங்கள். அதனை அணிந்து வீட்டில் உள்ளவர்களுக்கு நடித்துக்காட்டுங்கள்

**பயிற்சி வினாக்கள்**

1. நாடகமென்றில் வேட உடையின் பங்களிப்பு யாது?
2. வேட உடைகளை வடிவமைப்பவர் எப்பெயரில் அழைக்கப்படுவார்?
3. யதார்த்த நாடகங்களுக்கான வேடஉடைகள், யாதார்த்தம் சாராத நாடகங்களின் வேட உடைகளில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றன?
4. அறிவியல் புனைகதைசார் நாடகங்களின் வேட உடைகளை எவ்வாறு அமைத்தல் வேண்டும் ?

## 05. ஒப்பனையை மேற்கொள்ளல். (2.11)

- நடிகனைப் பாத்திரமாக மாற்றுகின்ற மற்றுமொரு செயற்பாடு ஒப்பனையாகும்.
- பாத்திரத்தின் வேட உடையினால் மறைக்கப்படாத பகுதிகளுக்கு ஒப்பனை மேற்கொள்வர்.
- குறிப்பாக முகம், தலை என்பன முக்கியத்துவம் பெறுகின்றன.
- நடிகன் பார்ப்போர் முன்னிலையில் தன்னை பாத்திரமாக பௌதீக நிலையில் இனங்காட்டிக் கொள்வதற்கு வேட உடையுடன் இணைந்து ஒப்பனை முழுமையைக் கொடுக்கின்றது.
- ஒப்பனையானது பாத்திரத்திற்குப் பாத்திரம் வேறுபடும்
- யதார்த்த நாடகங்களுக்கு ஒருவகை ஒப்பனையும், யதார்த்தம் சாராத நாடகங்களுக்கு ஒருவகை ஒப்பனையும் அமையும்.
- ஒப்பனையானது பாத்திரத்தின் ***வயது, பால், சமூக அந்தஸ்து*** , ***உளவியல் குணாம்சம்*** என்பவற்றுக்கு ஏற்ப செய்துகொள்ளப்படும்
- விஞ்ஞான அறிவியல் கற்பனையான நாடகங்களில் ஒப்பனையானதுயானது பெரும்பாலும் கற்பனை சார்ந்ததாக அமையும். *விசித்திரம், வினோதம், அழகு, கவர்ச்சி* என வியக்கவைக்கும் வகையில் அமைவது பொருத்தமானது என்பர். அதற்கு வர்ணங்கள், கோடுகள், விசேட வரைதல்கள் போன்றனவெல்லாம் பயன்படுத்தப்படுவதுண்டு.
- ஒப்பனைக்குப்பயன்படும் சில பொருட்கள் வருமாறு பவுடர், சீப்பு, கண்ணாடி, அடைப்பூச்சு (pan cake)உதட்டுச்சாயம் ,கண் மை…

- ஒப்பனையின் பயன்பாடுகள் சில வருமாறு
  - நடிகனை பாத்திரமாக மாற்ற உதவும்.
  - வகைமாதிரியான பாத்திரங்களை உருவாக்க உதவும்
  - வேட உடையை முழுமைப்படுத்தும்.
  - பால் வேறுபாடுகளைக் காட்டும்.
  - பாத்திரத்தினை தூரப்பார்வைக்கு தெளிவாகத் தெரிய உதவும்

**செயற்பாடு**

- உங்களுக்கு கிடைக்கக்கூடிய ஒப்பனைப்பொருட்களைக் கொண்டு நீங்கள எழுதிய நாடகத்திற்கான ஒப்பனையை செய்து பாருங்கள்.
- வீட்டில் உள்ளவர்களுக்கு காண்பித்து அவர்களின் அபிப்பிராயத்தினைப் பெறுங்கள்
- இணையத் தளங்களில் தேடுதல் செய்து வெவ்வேறு முறைகளில் ஒப்பனை செய்யப்பட்ட பாத்திர முகங்களைச் சேகரித்துவையுங்கள்.
- ஒப்பனைப்பொருட்கள் சார்ந்த பட்டியல் ஒன்றினைத் தயாரியுங்கள்

**பயிற்சி வினாக்கள்**

1. ஒப்பனை என்றால் என்ன?
2. ஒப்பனையின் பயன்பாடுகள் சில தருக?
3. சாதாரண வாழ்வில் பயன்படுத்தும் ஒப்பனைப் பொருட்களை எழுதுக?
4. சிறுவர் நாடகங்கின் ஒப்பனை எவ்வாறு அமையும்

## 06. படைப்பாற்றலுக்கான பயிற்சிகள் (3.7)

- படைப்பாற்றல் விருத்திக்கு கற்பனைத் திறன் அவசியமாகும். உடல் உளத்தளர்வு நிலையடையும்போது கற்பனை வளம் விருத்தி பெறுவதற்கான சாத்தியப்பாடுகள் அதிகரிக்கின்றன.
- கற்பனைத்திறனை விருத்தி செய்வதற்கு பயிற்சிகள் அவசிமாகும்.
- தனியாகவும் கூட்டாகவும் படைப்புக்களை உருவாக்க முடியும். கூட்டாக இணைந்து படைப்பாக்கம் செய்யும்போது அது வலிமையுடையதாக உருப்பெறும்.
- படைப்பாற்றல் விருத்திக்கான கற்பனைத்திறன் அவசியமாகும்
- உடல்,உளத்தளர்வு நிலையை அடையும் போது கற்பனைவளம் விருத்தி பெறுவதற்கான சாத்தியப்பாடுகளும் அதிகரிக்கின்றன.
- கற்பனைத்திறனை விருத்தி செய்வதற்கு பயிற்சிகள் அவசியமாகும்
- தனியாகவும் கூட்டாகவும் படைப்புக்களை உருவாக்கமுடியும்
- கூட்டாக இணைந்து படைப்பாக்கம் செய்யும்போது அது வலிமையுடையதாக உருப்பெறும்

## 07. ஊமச்சித்திரிப்பு (3.8)

- வாய்பேசாமலே எமது உடலால் யாதேனும் சூழமைவைச் சித்திரித்துக் காட்டலாம். அதனையே **ஊமம் நிகழ்த்துதல்** (Miming) என்கின்றோம்
- ஊமச்சித்திரிப்பில் ஈடுபடும் போது மனிதரின் உடல் நெகிழ்வாகவும், தளர்வாகவும் இருத்தல் வேண்டும்.
- நாம் நாளாந்த வாழ்வில் காணும் / அனுபவிக்கும் நிகழ்வுகளை கருத்தூன்றி அவதானித்து, அவற்றுள் ஊமச்சித்திரிப்புக்குப் பொருத்தமானவற்றை மாத்திரம் தெரிவுசெய்து கொள்ள வேண்டும்
- சொற்களையும் பொருட்களையும் பயன்படுத்தாது உடலை மாத்திரம் பயன்படுத்தி யாதேனும் செயலை, அல்லது சம்பவத்தை ஆக்கபூர்வமாக முன்வைத்தலே “ஊமச்சித்திரிப்புக்கலை” எனப்படுகின்றது.

- ஊமச்சித்திரப்பை படைப்பதற்கு கற்பனாசக்தி அவசியமாகும்
- ஊமச்சித்திரப்புக்கான சூழமைவுகளை உருவாக்குவதற்காக நிஜ உலக நிகழ்வுகளையும் கற்பனை உலக நிகழ்வுகளையும் பயன்படுத்தலாம்
- ஓர் ஊமச்சித்திரப்பு 5-10 நிமிடங்கள் நீடிக்கலாம்
- ஊமச்சித்திரிப்பில் நாடகத்துக்குப் பொருத்தமான ஒரு சூழமைவு அடங்கி இருத்தல் வேண்டும்
- யதார்த்த நிலையை விஞ்சிய மிகைப்படுத்தலாகவும் ஊமச்சித்திரிப்பு முன் வைக்கப்படலாம் ஆனால் அது பாரப்பவருக்கு விளங்க வேண்டும்
- ஊமச்சித்திரப்புக்காக பொருத்தமான உடையும் ஒப்பனையும் அவசியமாகும்.
- ஊமச்சித்திரிப்புக்காக உடலைத் தயார்ப்படுத்துவதற்கு அரங்கப்பயிற்சிகளில் ஈடுபடவேண்டும்
- ஊமச்சித்திரிப்பின் மூலம் முகத்தின் உணர்ச்சி வெளிப்பாடும் காத்திரமாக அமைதல் அவசியமாகும்.

**செயற்பாடு**

- நாளாந்த வாழ்வில் நீர் செய்கின்ற செயல்களை நன்கு அவதானித்து அச்செயல்களை பொருட்களைப் பயன்படுத்தாது,குரலைப் பயன்படுத்தாது அதே போல் மீள மீளச் செய்து பயிலுங்கள். உதாரணமாக ‘பல் விளக்குதல்’, ‘தேநீர் குடித்தல்’, ‘வீடு பெருக்குதல்’ ‘சயிக்கிள் ஓடுதல்’….

## 08. கோலாட்டம், களிகம்பு (4.5)

எமது பாரம்பரியமான நாட்டார் கலைவடிவங்களில் பல்வேறு ஆடல் வகைகள் காணப்படுகின்றன. அவை குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஆடப்படுவதுடன் தனித்துவான ஆடல் நுட்பங்களையும் கொண்டு விளங்குகின்றன.

### கோலாட்டம்






- நிறங்கள் தீட்டப்பெற்ற கோல்களைக் கொண்டு தாளத்திற்கும் இசைக்கும் ஏற்றவாறு ஒன்றோடு ஒன்று தட்டி ஒலி எழுப்பி பெண்கள் ஆடும் நடனம் கோலாட்டம் எனப்படும்.
- கோல்களைக் கொண்டு ஆடுகின்ற ஆட்டமெல்லாம் கோலாட்டம் என்று கூறி விடமுடியாது. உதாரணமாக வசந்தன் ஆட்டம், சிலம்பாட்டம், கொடிக்களியாட்டம், களியலாட்டம், களிகம்பு போன்ற ஆட்டங்களில் கோல்கள் பயன்படுத்துப்படுகின்றன.
- இருப்பினும் பெண்கள் ஆடும் இக்கலை மட்டுமே கோலாட்டம் என்று அழைக்கப்படுகின்றது இதனை **வசந்தகால விளையாட்டு** என்றும் அழைப்பர்.
- தமிழகத்தில் பல இடங்களில் இந்த நடனம் ஆடப்படுகின்றது குஜராத், ஒரிசா, ஆந்திரா போன்ற பிற மாநிலங்களிலும், ஈழத்திலும் ஆடப்படுகின்றது.
- தமிழகத்தில் ‘கண்ணன் பிறப்பு’ நாளன்று கோலாட்டம் ஆடுவது ஒரு மரபாக உள்ளது அரசவிழாக்கள், கல்விக்கூட விழாக்கள் போன்ற பொது நிகழ்ச்சிகளிலும் சமூக விழிப்புணர்வுக்காக சமூகப்பணியார்களும் ஆடுகின்றனர்.
- இது பொதுவாக பெண்கள் மட்டுமே ஆடும் நடனமாக பலகாலம் விரவி வந்தாலும் தற்பொழுது சில இடங்களில் ஆண்கள் பெண்கள் இணைந்தும் ஆடுகின்றனர். திருமணம் ஆகாத ஆண்கள், சிறுமியர் இளம்பெண்கள் என பலரும் ஆடுகின்றனர்.
- கோலட்டத்தில் நேர்கோட்டு வடிவமுறை, வட்டவடிவமுறை, பின்னல் வடிவம், கூட்டல் வடிவமுறை அல்லது சிலுவைக்கோல் வடிவமுறை என பல வடிவங்கள் உண்டு.
- பொதுவாக சம தளங்களில் ஆடப்படும் நடனம் என்பதால் கால்களைத் தூக்கி ஆடும் தன்மை உடையது. கால்களைத் தூக்குவதிலும் ஒரு நியதி உள்ளது முன்னால் தூக்கி ஆடுவது

மகிழ்ச்சி அல்லது கொண்டாட்டத்தையும் பின்னால் தூக்கி ஆடுவது வீரம் , ஆவேசம் போன்ற உணர்வுகளையும் வெளிப்படுத்தும்.

- கோல்கள் கவர்ச்சியான வண்ணங்களால் நிறந்தீட்டப்பட்டிருக்கும் அவைகள் வைத்து ஆடல் பயிற்சிகள் பெற்றிருப்பர். ஆட்டம் மெதுவாகத் தொடங்கி படிப்படியாக வேகமாகி முடிவடையும்.
- பெண்கள் ஆடும் 'பின்னல் கோலாட்டத்தில' ஒரு கோலில் வண்ணத்துணி கட்டி, சுற்றி சுற்றி ஆடி ஒரு பின்னலை உருவாக்குகின்றனர். பின் அதையே எந்த தவறும் இல்லாது பிரித்து எடுக்கின்றனர். குறைந்த பட்சம் எட்டுப்போர் ஆடுகின்றனர் 12 பேர்வரை இக்கோலாட்டத்தை ஆட முடியும்.
- கோலாட்டத்தில் கோல்கள் எழுப்பும் இசையே மிகவும் முக்கியமானது மேலும் ஆடும் போது கால்களில் சலங்கையும் அணிவார்கள். பாடலுக்கு ஏற்ப தவில், டோலக் போன்ற கருவிகள் பயன்படுத்தப்படும்.
- பெண்கள் வண்ண வண்ண ஆடைகளை அணிவர் வண்ணங்கள் தீட்டப்பெற்ற கோல்களை கைகளில் வைத்திருப்பர் ஆண்கள் வேட்டியை தார்ப்பாச்சி கட்டிக்கொள்வர்.

## களிகம்பாட்டம்

- களிகம்பாட்டம் இலங்கையில் முஸ்லிம் மக்களினால் ஆடப்பட்டு வரும் ஒரு கோலாட்ட வடிவமாகும்.
- 'களிகம்பு' என்ற சொற்பிரயோகம் கேரளத்துடனும் தமிழ் நாட்டுடனும் தொடர்புடையது புத்தளம், மன்னார் உட்பட்ட இலங்கையின் அனேக முஸ்லிம் பிரதேசங்களில் இச்சொற் பிரயோகம் பயன்பாட்டில் உள்ளது.
- மலையாளத்தில் 'கோல்' கம்பையும் 'களி' ஆட்டத்தையும் குறிக்கின்றன. கேரள முஸ்லிம் மக்களின் ஆட்டமாக 'கோல்களி' விளங்குகின்றது.
- தமிழ் நாட்டுக் 'களியலும்' கேரளநாட்டு 'கோல்களியும்' இலங்கை முஸ்லிம்களின் 'களிகம்பாட்டத்தில்' செல்வாக்குச் செலுத்துவதாக கருத முடியும்
- இதில் ஒரு அடி நீளக்கம்பு பயன்படுத்தப்படும். களிகம்பு ஆட்டத்தில் ஆண்கள் மட்டுமே பங்கேற்கின்றனர்
- களிகம்பாட்டத்தின் பிரதான அம்சம், அதன் இனிய பாடல்களாகும் சில ஊர்களில் பக்கவாத்தியமாக மௌனமும் பயன்படுத்தப்படுகின்றது.
- களிகம்பாட்டத்தில் ஒன்பது முதல் பதினெட்டு வகைகள் இலங்கை முஸ்லிம்களிடத்தில் உள்ளன. மன்னார் மாவட்டம், புத்தளம், தென்மாகாணம், கிழக்கு மாகாணங்ளில் இந்த வகைகள் அனைத்தும் ஏறத்தாழ பொது அமைப்பில் இருப்பதை அவதானிக்கலாம்.
- ஒற்றை மல்லி, இரட்டைமல்லி, மானவெட்டி, ஒன்பது கம்பு என்று புத்தளம் மாவட்டத்தில் இதன் வகைகள் ஆரம்பிக்கின்றன.
- தென் மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் இது பின்வருமாறு வரிசைப்படுத்தப்படுகின்றது. ஒற்றை மல்லி, இரட்டை மல்லி, ஐந்து வெட்டு, ஏழு வெட்டு, மான் வளையம், தரித்தடித்தல், திருமல்லிகை, தேன்கூட்டடி, சற்றுக்கள்ளி, நாலுவீட்டுக்குச் செல்லுதல், தாளம்.. என வகைப்படுத்தப்படும். இவை ஒவ்வொன்றும் களிகம்பின் பலரக தாளகதியிலான அடிமானங்களாகும்.
- இந்த அடிமானங்களுக்கு இசைவான பாடல்களும் வெவ்வேறு தாளகதிக்குரியதாக இயற்றப் பட்டுப் பாடப்படுகின்றது.
- பாடல்கள் இஸ்லாத்தின் பெருமைகளைக் கூறும் பாடல்களாக அமையும்
- முஸ்லிம்களைப் பொறுத்தவரை 'களிகம்பு' முழுநிறைவான அவர்களது ஆட்ட வகையாகும் பொழுதுபோக்கு உட்பட வாழ்வின் மகிழ்வுக்குரிய, கவனத்துக்குரிய எல்லா நிகழ்வுகளிலும் தவறாது இடம்பெறும் கலையாக அவர்களது சமூக வாழ்வில் சங்கமித்திருக்கின்றது.




## 09.‘கண்டறியாத கதை’ நாடக எழுத்துருவை வாசித்தல். (5.1,5.2..)



இந்நாடக எழுத்துருவானது குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களால் எழுதப்பட்டது

பேவர்லி ரண்டெல் (Beverly Randell) என்பவரால் எழுதப்பட்ட The Stange Shoe என்ற கதையை அடிப்படையாக் கொண்டு இந்நாடகம் எழுதப்பட்டுள்ளது.

கண்டு + அறியாத கதை

**பாத்திரங்கள்**

- ஆந்தையார்,
- கரடியார்,
- வரிக்குதிரையார்,
- நரியார்,
- மானார்,
- குரங்கார்
- மாணவர்கள்

**கதைப்பொருள்**

இந்நாடகத்தின் கதையானது காட்டிலே ஒரு சப்பாத்துக் கிடக்கின்றது அதனை காட்டிலே வாழும் ஆந்தையைத் தவிர விலங்குகள் யாரும் பார்த்ததில்லை. அதனால் அவர்கள் அதனைப் பார்த்துப் பயப்படுகிறார்கள், காட்டில் அது ஒரு பிரச்சனையாக எடுத்துக் கொள்ளுகின்றார்கள். அது ஓர் உயிருள்ள பொருளாக இருக்குமோ என்று சந்தேப்படுகின்றார்கள், பயத்துடன் நெருங்கிப் பார்க்கின்றார்கள், அதில் அசைவுகள் இல்லாதபோது சற்றுப் பயந்தெளிந்து அதனை ஆராய்ச்சி செய்கின்றார்கள். மணந்து பார்க்கின்றார்கள், தொட்டுப்பார்க்கின்றார்கள் இறுதியில் ஒவ்வொருவரும் தாம் தாம் கண்ட உலகத்தில் நின்று விளக்கம் கொடுக்கின்றார்கள். நரி அதனை **குருவிக் கூடு** என்கிறார், கரடி அதனை ஒரு **காய்ந்த பழம்** என்கிறார், வரிக்குதிரை அதனை ஒரு **காய்ந்த மீன்** என்கிறார், குரங்கு அதனை ஒரு **பழவிதை** என்கின்றார், மான் அதனை ஒரு **மரப்பட்டை** என்கிறார், இவ்வாறு அவர்கள் தாம் தாம் நினைத்ததுதான் சரி எனவும் மற்றையது பிழை எனவும் தமக்குள் முரண்படுகின்றார்கள். இவர்கள் முரண்படுகின்றபோதும் மரத்திலே இருக்கின்ற ஆந்தையார் மட்டும் அலட்டிக் கொள்ளாது அவர்களின் அறிவீனத்தினை வேடிக்கை பார்க்கின்றார். எல்லோரும் அவரைக் கிண்டலடித்தபோதுதான் அவர் வந்து காட்டுக்கு அப்பாலும் காடுகள் உண்டு, உலகம் உண்டு, மனிதர்கள் உண்டு, உலகம் மிகவும் பெரியது என்று விளக்கம் கொடுத்து அந்தப்பொருள் **மனிதர்கள் அணியும் சப்பாத்து** என விளக்கமளிக்கின்றார். மனிதர்களையோ அவர்கள் பயன்படுத்தும் பொருட்களையோ பார்த்தறியாத (கண்டறியாத) அவர்கள் தமக்குள் முரண்பட்டு ஆந்தையாரை நம்பாது கேலிசெய்து கலைத்து துரத்துகின்றார்கள்.

**கருப்பொருள்**

கிணற்றுத் தவளைகளைப் போல் உலகம் தெரியாது வாழ்பவர்களால் உலகில் இருக்கும் உண்மைகளை உணர்ந்து கொள்ளமுடியாது. (யதார்த்தவாதி வெகுஜனவிரோதி)

**முரண்**

அறிவுக்கும் அறியாமைக்குமான முரண் சித்திரிக்கப்படுகின்றது

**விடயப் பொருள்**

- அறியாத பதிய விடயத்தை அறிந்தவர் கூறும் போது அதனை ஏற்காத யதார்த்த நிலை வெளிப்படுத்தப்படுகின்றது
- அவரவர் தத்தமது வாழ்வு அனுபவ வட்டத்தினுள் மட்டும் நின்று சிந்திக்கும் நிலமை சித்திரிக்கப்படுகின்றது.
- தாம்வாழும் உலகை விட வெளி உலகம் இருந்ததென்பதனை ஏற்க மறுக்கும் நிலை வெளிப்படுத்தப்படுகின்றது
- யதார்த்தவாதி வெகுஜன விரோதியாகப் பார்க்கப்படுகின்றார்.

**செயற்பாடு**

- கண்டறியாத கதை நாடகத்தினை இரண்டு மூன்று தடவைகள் வாசியுங்கள் .
- அதிலுள்ள பாடல்களைப் பாடிப்பாருங்கள்.
- வீட்டில் உள்ள சகோதரர்களுடன் அதிலுள்ள சிறியகாட்சி ஒன்றினை நடித்துப்பாருங்கள்.
- இதனை நாடகமாக்கும் போது பாத்திரங்களுக்கு எவ்வாறான வேட உடை அணியப் பெறவேண்டுமென்பதனை திட்டமிட்டு வரையுங்கள்.

**நாடக ஆசிரியர்**



- இதன் நாடக ஆசிரியர் **கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம்**
- இவர் 'ஈழத்தின் தமிழ் நாடகத்தலைமுறை ஒன்றின் தாய்' என வர்ணிக்கப்படுபவர்.
- நடிகர்,நாடக ஆசிரியர்,நெறியாளர், தாயாரிப்பாளர்,ஆய்வாளர்,என பன்முக ஆற்றல் கொண்டவர்.
- நாடக அரங்கக் கல்லூரியின் தாபகர்
- சிறுவர் நாடகம், பாடசாலை நாடகம், நவீனநாடகம், மொழிபெயர்ப்பு நாடகம், நடன நாடகம் என பல வகை நாடகங்களையும் எழுதியவர்
- ஈழத்தில் செயல்திறன் வாய்ந்த சிறுவர் நாடகங்களை எழுதிய முன்னோடியாக விளங்குகின்றார்.
- அவர் எழுதிய சிறுவர் நாடகங்களில் **கூடி விளையாடு பாப்பா, ஆச்சிசுட்ட வடை, முயலார் முயல்கின்றார், பண்பம் பயனும், பஞ்சவர்ண நரியார், பாலுக்குப் பாலகன், ஒற்றுமையின் சின்னம், கண்மணிக் குட்டியார்,….** என்பவை குறிப்பிடத்தக்க நாடகங்கள் ஆகும்.

---------------------------------------------------------------

**உதவியவை**


ஆசிரியர் வழிகாட்டி (தரம் 07)

மேலதிக வாசிப்பு நூல் (தரம் 07)

நாட்டுப்புறக் கலைகள் (முனைவர் ஆறு.இராமநாதன் )

அடவுகட்டி ஆட (வின்சென்ட் பெ.வில்சன்)

இலங்கையில் முஸ்லிம் நுண்கலை (கலாநிதி எம்.எஸ். ஏம் அனஸ்)

மட்டக்களப்பு தமிழகம் (வி.சி. கந்தையா)

கண்டறியாத கதை (குழந்தை ம. சண்முகலிங்கம்